# யாழ். மாநகரசபைத் தேர்தலுக்கு கட்சிகள் தயாராகின்றன

Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49
போன் 389
National Tamil Daily
மலர் 9
இதழ் 341
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் இலங்கை ஐப்பசி 24 ஷஃபான் 7 வெள்ளிக்கிழமை [10-11-67]

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாண மாநகர சபைக்கு விரைவில் புதிய தேர்தல் நடைபெறுமென உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் அறிவித்ததைத் தொடர்ந்து மாநகரசபையின் முன்னாள் அங்கத்தவர்கள் பலரும், தமிழரசு, தமிழ்க்காங்கிரஸ், இடதுசாரிக் கட்சிகள் ஆகியவையும் சுறுசுறுப்புடன் தேர்தல் வேலைகளை ஆரம்பித்துள்ளன.

தமிழ்க்காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், யாழ்ப்பாண மாநகர சபைத் தேர்தலில் தமிழ் காங்கிரஸ் அபேட்சகர்களை நிறுத்துவது சம்பந்தமாக கட்சிப் பிரமுகர்களுடன் ஆலோசனை நடத்தினார்.

மாநகரசபை வட்டாரங்கள் இருபத்திரண்டாக விஸ்தரிக்கப்படுமென்று திரு பொன்னம்பலம் தெரிவித்ததாக அறியப்படுகிறது. சில வட்டாரங்களில் நிறுத்தப்படும் அபேட்சகர்கள் பற்றி காங்கிரஸ் முடிவு செய்துவிட்டதாகவும் அறியப்படுகிறது.

# மந்திரிசபையில் மாறுதல் ஏற்படலாம்

## ஆளும் கட்சித் தலைவர்கள் நாளை சந்திப்பு

கொழும்பு, வியாழன்

**தேசியஅரசாங்கத்தில் ஏற்பட்டுள்ள கட்சிப் பிளவு, கோஷ்டி மனப்பான்மை, கருத்துவேற்றுமை ஆகியவைகளை நீக்கி அரசாங்கத்தில் ஒற்றுமையையும் ஸ்திரமான நிலைமையையும் ஏற்படுத்துவதற்காக அரசாங்கத்தில் அங்கம்வகிக்கும் கட்சிகளின் தலைவர்களைக்கொண்ட மகாநாடு ஒன்றை நாளை சனிக்கிழமை பிரதமர் கூட்டுகிறார்.**

தேசியஅரசாங்கம் அமைக்கப்பட்டதன் நோக்கம் பற்றியும் அந்த நோக்கம் நிறைவேறுவதிலுள்ளஇடையூறுகள் பற்றியும் பிரதமர் இந்த மகாநாட்டில் எடுத்துக் கூறுவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

அரசாங்கம் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகள் பலவற்றை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பையுடைய சில அமைச்சர்கள் தங்கள் கடமையைச் சரிவரச் செய்யத் தவறிவிட்டனரென்பதை கட்சித்தலைவர்கள் சிலர் இம்மகாநாட்டில் எடுத்துக் கூறுவார்களெனத் தெரிகிறது.

மந்திரிசபையைத் திருத்தி அமைப்பதுபற்றியும் இம்மகாநாட்டில் முடிவு செய்யப்படக்கூடுமெனவும் அறியப்படுகிறது.

## மேலதிக ஆசிரியர் மாற்றப்பட வேண்டும்

புன்னாலைக் கட்டுவன்; வியா.

''நாட்டின்எப்பாடசாலையிலும் தேவைக்கு மேலதிக ஆசிரியர் இருக்கக் கூடாது. மேலதிக ஆசிரியர் பற்றாக்குறையாகவுள்ள வேறு பாடசாலைகளுக்கு மாற்றப்படவேண்டும். ஒரே தகைமையுடைய பல ஆசிரியர்கள் ஒரு பாடசாலையில் இருந்தால், கடைசியாக நியமிக்கப்பட்ட அத்தகைய ஆசிரியர் இடமாற்றப்படல் வேண்டும்.''

இவ்வாறு கல்வியமைச்சின் சுற்றறிக்கையொன்று கூறுகிறது.

மேலதிக ஆசிரியர்விடயத்தில் உடனடி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டுமென பிரதேச கல்வியதிகாரிகளுக்கு இவ்வறிக்கை உத்தரவிட்டுள்ளது.

ஹொங்கொங்கில்

## இருசீனர் கொல்லப்பட்டனர்

ஹொங்கொங், நவ. 9

ஹொங்கொங்கில் நேற்று பயங்கரவாதிகள் தெருக்களில் பலாத்காரத்தில் இறங்கினர்; அப்போது பொலிசார் சுட்டதன் விளைவாக 2 சீனர்கள் கொல்லப்பட்டனர். சீனக்கலவரக்காரர்களுடன் நடைபெற்ற மோதலில், 7 பொலிசாரும் மற்றும் 30 பேரும் காயத்துக்குள்ளாகினர்.

## ஆசிரியர் இடமாற்றத்தில் எம். பி. க்கள் தலையிடமாட்டார்

புன்னாலைக்கட்டுவன், வியா.

'நடைபெறவிருக்கும் ஆசிரியர் இடமாற்றத்தில் எம். பி.க்கள் தனிப்பட்ட ஆசிரியருக்காகத் தலையிடுவதில்லை என்ற முடிவுக்கு வந்துள்ளனர். ஆனால் நியாயபூர்வமான கொள்கையடிப்படையில் அவர்கள் தலையிட வேண்டி ஏற்படலாம்.'

இவ்வாறு உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம், ஓர் ஆசிரியர் தூதுகோஷ்டியிடம் கூறினார்.

'பாடசாலைகளின் கல்வித்தரம் பாதிக்கப்படுமென அதிபர்கள்பீதியடைந்தால், அதிபர்கள் சங்க மூலம், ஆக்கபூர்வமான ஆலோசனைகளை எமக்குத்தந்தால், அவற்றை நாம் ஏற்று உரிய நடவடிக்கைகளை நாம் எடுக்கலாம்' என்றும் அவர் கூறினார்.

### ''தொழிலாளர் நன்மை அடைவர்''

திருக்கோணமலைத் துறைமுகம் தேசியமயமாக்கப்பட்டதால் தொழிலாளர்கள் நிச்சயம் நன்மை அடைவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

இப்போது மூதூர் தொகுதியின் முதலாவது பாராளுமன்ற உறுப்பினர் ஜனாப். எம். ஈ. எச். முகமதலி நமது நிருபரிடம் கூறினார்.

தேசிய அரசாங்கம் திருக்கோணமலைத் துறைமுகத்தைத் தேசியமயமாக்க வேண்டுமென்று கோரிக்கை விடுத்து அதற்காக உழைத்த ஆயிரக்கணக்கானோரில் நானும் ஒருவன் என்பதைக் கூறுவதில் பெருமை அடைகிறேன் என்றும் அவர் கூறினார்.

## "தனிநாடு அமைப்பினும் திருமலை கிடைக்காது"

### மிருசுவிலில் ஜி. ஜி. பேச்சு

யாழ்ப்பாணம். வெள்ளி

தமிழ் மக்களுக்குள்ளஒரேயொரு சிறந்ததுறைமுகம் திருக்கோணமலைத் துறைமுகம்தான் இன்றில்லாவிட்டாலும் ஒருகாலத்தில் இங்கு தமிழ் இனம் தனக்கெனத் தனிநாடு ஒன்றை நிறுவிக்கொள்ள நேர்ந்தாலும் தமிழருக்கென இருந்த ஒரேயொரு துறைமுகம் பறிபோய் விட்டது. இனியும் சமஷ்டி ஆட்சி பற்றி பேசுவதில் அர்த்தமில்லை.

இவ்வாறு தமிழ்காங்கிரஸ் தலைவரும் யாழ்ப்பாணம் எம். பி. யுமான திரு .ஜீ ஜீ. பொன்னம்பலம் மிருசுவிலில் நேற்று முன்தினம் நடந்த பொதுக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்

மிருசுவிலில் சந்தை மைதானத்தில் நேற்று நடந்த தமிழ்காங்கிரஸ் வாலிபமுன்னணிப் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையிலேயே திரு. பொன்னம்பலம் மேற்கண்டவாறு கூறினார்.

மிருசுவில் உசன் தமிழ் காங்கிரஸ் வாலிப முன்னணிக் கிளையினரால் ஒழுங்கு செய்யப்பட்ட இக்கூட்டத்திற்கு பாரிஸ்டர் எம். சிவானந்தன் தலைமை வகித்தார்.

கொடிகாமம் அரசினர் ஆஸ்பத்திரியிலிருந்து திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் திரு தா. சிவசிதம்பரம் பரீஸ்டர் சிவானந்தன்மற்றும் பேச்சாளர்கள் மேள வாத்தியத்துடன் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

இக்கூட்டத்தில் திரு ஜீ. ஜீ. பொன்னம்பலம் பேசும் குறிப்பிட்டதாவது:-

1970-ம் ஆண்டு நடுத்த பொதுத்தேர்தல் நடக்கும் வரை சமஷ்டிக்கட்சியினர் தேசிய அரசாங்கத்தை விட்டு வெளியேறமாட்டார்கள். தேசிய அரசாங்கத்திலுள்ள சிங்கள எம். பி. க்கள் வெளியேறச் சொல்லிவற்புறுத்தினாலும் சமஷ்டிக் கட்சியினர் வெளியேறமாட்டார்கள். சமஷ்டிக்கட்சி எம். பி. க்கள்சிலரின் சொந்த விஷயம் காரணமாகவே அரசாங்கத்துடன் ஒட்டிக் கொண்டிருக்கிறார்கள். அந்த இரகசியம் எங்களுக்குத் தெரியும்'' அதை வெளியிடுவது சரியல்ல.

### திருமலை துறைமுகம்

திருமலை துறைமுக விஷயத்தில் நாங்கள் தலையிடாமல் ஒதுங்கியிருந்தோம்.

[8-ம் பக்கம் பார்க்க]

ஜி. ஸி. ஈ. தமிழ்மொழி 'அ' பாடத்திட்டத்துக்கான மாதிரி வினாக்களை 6-ம் பக்கத்தில் பார்க்க.

தபாற் கந்தோர் தலைவர் தந்தியாளர் பரீட்சைக்கான மாதிரி வினா விடைகள் நாளை [11-11-67] வெளிவரும்.

## மரண அறிவித்தல்

### பொ. இரத்தினகோபால்

ராணி சினிமா மனேஜர் பொ. இரத்தினகோபால் காலமானார். அன்னாரின் ஈமச்சடங்குகள் இன்று [10-11-67] பிற்பகல் 2-00 மணியளவில் வில்லூன்றி மயானத்தில் நடைபெறும். உறவினர்கள், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டப்படுகின்றனர். 48/6, ஸ்ரான்லிறோட்-சிறும்பியடி, யாழ்ப்பாணம். 138

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### NOTICE

Applications are invited for the post of an Administrative Secretary Cum Accountant for the Co-operative Hospital Society Ltd., Moolai.

A retired person of Staff rank with Administrative and Accounting experience. Preference will be given to candidates with the knowledge of Building Works.

Should be Ceylonese. Age not below 40 years and not over 50 years.

Salary Scale: Rs. 3900-8 of 180 and 5 of 240 — Rs. 6540 per annum with dearness allowance at Hospital rates. The selected candidate may be placed on a suitable step in the Scale according to experience.

He will be required to live within a radius of two miles of the Hospital. He should give Security Rs 5000/- in Cash ane Landed Property.

Applications not made strictly in accordance with this notice will be rejected. Canvassing of any sort will be a disqualification.

Applications Should be addressed to president, Co-operative Hospital Society Ltd., Moolai, Chulipuram on or before the 30th November 1967 with copies of Birth Certificates and other testimonials. "Application for the post of administrative Secretary cum Accountant" should be inserted on the envelope of the application. 319

## சலூன் வழக்கு அப்பீல்

யாழ்ப்பாணம், வெள்ளி

கொடிகாமம் சலூன் வழக்குத் தீர்ப்பை எதிர்த்து சாவகச்சேரி மாஜிஸ்திரேட் முன்னிலையில் நேற்றுக் காலை அப்பீல் தாக்கல் செய்யப்பட்டது. சலூன் உரிமையாளர் தமது வழக்கறிஞர் திரு. கே. ஞானச்சந்திரன் மூலம் அப்பீல் செய்தார்.

இவ்வழக்கில் கொடிகாமத்திலுள்ள சிகை அலங்கரிப்பு நிலையமொன்றின் உரிமையாளரான சின்னத்தம்பி சின்னுன் என்பவர் இவ்வருடம் ஜூலை மாதம் 31-ந் திகதி அல்வாயைச் சேர்ந்த கோவிந்தனுக்கு முடி வெட்ட மறுத்ததாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது விசாரணையின்பின் மாஜிஸ்திரேட் எதிரிக்கு 100 ரூபா அபராதம் விதித்து, கட்டத்தவறினுல் 3 வார சிறைத் தண்டனை எனத் தீர்ப்பளித்திருந்தார்.

— —

## இங்கிலாந்து மணி

### மருதடி விநாயகருக்கு

சுழிபுரம், வியாழன்

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்துக்கு புதிய மணியொன்று இங்கிலாந்திலிருந்து கொண்டுவரப்பட்டுள்ளது. இம்மணி இம்மாத நடுப்பகுதியில் பாவனையில் ஈடுபடுத்தப்படும். கோவில் இருவாசல் கோபுரம் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது. புதிதாக வைக்கப்படும் இம்மணிச்சத்தம் பல மைல் தூரம் கேட்குமாம்.

## வித்தியாதிபதியை சந்தித்தனர்

யாழ்ப்பாணம், வெள்ளி

சில பாடசாலைகளில் ஒன்றுக்கு மேற்பட்ட ஆலோசக ஆசிரியர்கள் கடமையாற்றுவதாகவும், சில பாடசாலைகளில் ஆலோசக ஆசிரியர்கள் இல்லாதிருப்பதாகவும், இயன்றவரை எல்லாப் பாடசாலைகளிலும் ஆலோசக ஆசிரியர்களை நியமிக்குமாறும் வடபகுதி கல்வி அதிகாரியைப் பேட்டி கண்ட அகில இலங்கை ஆலோசக ஆசிரிய சங்கத் தலைவர் திரு. க. மாணிக்கமும், காரியதரிசி திரு. சி. சின்னராஜாவும் கேட்டுக்கொண்டனர்.

## சூரன்போரில் திருடரின் கைவரிசை

இமையாணன், வியா.

தொண்டைமனாறு செல்வச்சந்நிதி கோவிலில் சூரன் போர் நடந்துகொண்டிருந்தது. ஏராளமான ஜனத்திரள். இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி திருடர்கள் தமது கைவரிசையை காட்டினார்கள்: சங்கிலி உட்பட பல நகைகள் திருடப்பட்டன.

கோவிலில் இருந்து வீடு திரும்ப பஸ் நிலையத்திற்குச் சென்ற ஒரு பெண்மணியின் குழந்தையின் கழுத்தில் இருந்த சங்கிலியை ஒரு திருடன் அறுத்தபொழுது அத்திருடன் பிடிபட்டான் பொலிஸாரிடம் திருடன் ஒப்படைக்கப்பட்டான்.

## இலங்கையர்கோன் நினைவுவிழா

சுழிபுரம், வியாழன்

வடஇலங்கை கிராமியக் கலைக்கழகத்தினர் இம்மாத நடுப் குதியில் இலங்கையர்கோன் நினைவுதினத்தை யாழ்ப்பாணத்தில் கொண்டாடுவதற்கு ஏற்பாடுகள் செய்து வருகின்றனன.

## காத்திருந்தனர்

கொடிகாமம், வியாழன்

கொடிகாமம் பஸ்நிலையத்தில் நேற்றுக்காலை இரண்டு இரட்டைத்தட்டு பஸ்கள் பழுதடைந்ததால், பிரயாணிகள், நீண்டநேரம் காத்திருந்தனர். கொடிகாமத்திலிருந்து வந்த மற்றொரு இரட்டைத்தட்டுபஸ், நேற்றுக்காலை அரியாலையில் பழுதடைந்து விடடது.

கடந்த ஒருவாரகாலமாக கொடிகாமத்தில் தினமும் ஒரு பஸ் பழுதடைவதால் பிரயாணிகள கஷ்டப்படுகின்றனர்.

## கொழும்பு செய்திகள்

1968-ம் ஆண்டு ஜனவரி மாதம் சென்னையில் நடைபெறவிருக்கும் இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சி மகா நாட்டுக்கு இலங்கையிலிருந்து அனேகர் பார்வையாளர்களாக வருவதற்கு எளிதாக்கும் விதமாக தலைமன்னார் - தனுஷ்கோடி கப்பல்சேவை உடனடியாக ஆரம்பிக்க நடவடிக்கைகள் எடுக்கவும்.

இவ்வாறு கொழும்பு இலக்கிய வட்டம் தமிழக முதலமைச்சர் திரு. சி. என். அண்ணாத்துரைக்கு அனுப்பிவைத்துள்ள கடிதமொன்றில் கேட்டுள்ளது.

ஃ ஃ ஃ

### கதிர்காமம் செல்வர்

கதிர்காமத்தில் நடைபெறவிருக்கும் கார்த்திகை விளக்கீட்டு உற்சவத்தில் கலந்து கொள்வதற்கு கொழும்பு சண்முகானந்த கானசபையினர் இரண்டு விஷேச பஸ்களில் தமது உறுப்பினர்களை அழைத்துக் கொண்டு இம்மாதம் 16-ந் திகதி செல்ல விருக்கின்றனர் அங்கு கூட்டுப்பிரார்த்தனையும் நடத்துவர்.

### நீதிராசாவுக்கு பாராட்டு விழா

புதிய செனட்டர் திரு. த. நீதிராசாவுக்கு பாராட்டு விழாவொன்று இம்மாதம் 15-ம் திகதி கொழும்பு பொதுமக்கள் சார்பில் நடைபெறவுள்ளது.

கொட்டாஞ்சேனை கமலா மோடி பண்டபத்தில் பாராட்டு விழா முன்னாள் செனட்டர் ஜனாப் மசூர் மௌலானா தலைமையில் நடைபெறும். பிரபல சமூக சேவையாளர்களும் அமைச்சர்களும் பாராட்டுரை வழங்கவுள்ளனர்.

### கோடீஸ்வரன் வழக்கு இதுவரை ரூ 6000

கோடீஸ்வரன் வழக்கு சம்பந்தமான பிரிவுக் கவுன்சில் அப்பீல் நிதிக்கு இதுவரையில் 6,000 ரூபாவுக்கு மேல் சேர்ந்துள்ளதாக திரு கோடீஸ்வரன் தெரிவித்தார்.

இங்குள்ள துறைமுக நாவாய் இயக்குனர் கழக உறுப்பினர்கள் கோடீஸ்வரன் வழக்கு நிதிக்கு ரூபா 1000 சேர்த்துக் கொடுத்துள்ளனர்.

## வரி விளம்பரம்

### தேவை

காலையில் பகுதி நேரவேலைக்கு, பத்திரிகை விநியோகம் செய்யும் பையன்கள் தேவை. சொந்தமாகச் சைக்கிள் வைத்திருந்தால் விரும்பத்தக்கது வயது, கல்வித் தராதரம் ஆகிய விபரங்களைக் குறித்து 15-11-67-க்கு முன் விண்ணப்பிக்கவும். ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 2112.

இளைஞர்கள்:

யாழ்ப்பாணப் பகுதிக்கு விளம்பரங்கள் சேகரிப்பதற்கான இளைஞர்கள் தேவை. பிணைப்பணம் கட்டக்கூடியவர்கள் விண்ணப்பிக்குக. தகுந்த கொமிஷன் வழங்கப்படும். திருநாடு, 165, திருநகர், கிளிநொச்சி. 2116

உதவி ஆள்

பிராமண சமூக அரசாங்க உத்தியோகஸ்தர் ஒருவரது 12 வயதுச் சிறுமிக் குத் துணையாக ஒரு பிராமண விதவைப் பெண் தேவை. வயது சுமார் 40-க்கு மேல் விரும்பத்தக்கது. பிற்கால சீவிய உறுதிப்பாடு, அல்லது மாதச் சம்பளம் கொடுக்கப்படும். தொடர்பு கொள்க: C/o 'ஈழநாடு'. 2563

### விற்பனைக்கு

பழைய ஆங்கில, தமிழ்ப் புதினப் பத்திரிகைகள் விற்பனைக்குண்டு. வாங்க விரும்புபவர்கள், வார நாட்களில் பிற்பகல் 3 மணிக்கும் 5 மணிக்குமிடையே 'ஈழநாடு' காரியாலயத்துக்கு வந்து தொடர்புகொள்ளலாம். 2113

நாய்க் குட்டிகள்!

(பொம்மேரியர்) சின்ன சடைநாய்ச் குட்டிகள் விற்பனைக்குண்டு. 46, கொழும்புத்துறை ரோட், சுண்டிக்குளி. 2564

### நாஞ்சில் மனோகரன் வருவார்

இம்மாத இறுதிக்குள் தமிழக தி. மு. க. தலைவர்களிலொருவரும் இந்திய லோகசபை உறுப்பினருமான திரு நாஞ்சில் மனோகரன் அவரது மனைவியுடனும் இரண்டு பிள்ளைகளுடனும் இங்கு வரவுள்ளார்

திரு. மனோகரன் இலங்கையை சுற்றி பார்க்கும் உத்தேசத்துடன் தான் வருகிறார் என தெரிகிறது.

## ஓடு பிரித்து ரூ. 10,000 பொருட்கள் திருட்டு

### திருநெல்வேலியில் சம்பவம்

யாழ்ப்பாணம், வெள்ளி

ஓடு பிரித்து சுமார் 10,000 ரூபாய் பெறுமதியான பொருட்கள் களவாடப்பட்டுள்ளன. இச் சம்பவம் திருநெல்வேலி கிழக்கிலுள்ள வீடொன்றில் நேற்று நள்ளிரவு நடைபெற்றதாக பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

கல்வியங்காடு சந்தையில் இருக்கும் வர்த்தக ஸ்தாபனம் ஒன்றின் உரிமையாளரின் வீட்டிலிருந்தே இப்பொருட்கள் களவாடப்பட்டுள்ளன. ஓடு பிரித்து அறைக்குள் இறங்கிய திருடர் தாலிக்கொடி, நகைகள் ரொக்கப்பணம் உட்பட இன்னும் பல பொருட்களைக் களவாடிச் சென்றதாக கோப்பாய் பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் நடந்த போது இங்கு இரு வயோதிபர்கள் மாத்திரம் இருந்ததாகவும் பொலிஸிற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வீட்டில் கிடந்த சந்தேகத்திற்கிடமான பொருள் ஒன்றை வைத்துக் கொண்டு கள்வர்களைக் கண்டு பிடிப்பதில் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டு வருவதாகத் தெரிகின்றது.

இப்பகுதில் ஒரு வாரத்தில் மூன்றாவது களவு இது. இதுவரை இக் களவுகள் சம்பந்தமாக எவரும் கைது செய்யப்படவில்லை. புலன் விசாரணை நடைபெறுகின்றது. [ந. நி]

## பிலிப்பைன்ஸ் சூறுவளி

### 98 பேர் பேர் இறந்தனர்

மணிலா, நவ. 9

பிலிப்பைன்ஸில் சூறுவளி காரணமாக இறந்தவர்கள் எண்ணிக்கை 98 ஆக உயர்ந்துள்ளது.


இப்பொழுது நடைபெறுகிறது

வெலிங்டன் [யாழ்ப்பாணம்]

தினசரி பி.ப. 2-30, மாலை 6-20, இரவு 9-30 மணிக்கு

பிளாஸா [வெள்ளவத்தை]

கெப்பிட்டல் [கொழும்பு]

மைலன் [கொட்டாஞ்சேனை]

விஜயா [மட்டுநகர்]

ஸ்ரீகிருஷ்ணு [திருமலை]

மற்றும் நாலு திரைகளில்

எம். ஜி. ஆரும், ஜெமினி கணேசனும்

முதல்முறையாக சேர்ந்து நடித்து வெற்றி கண்ட இன்பச் சித்திரம்!

கடமைக்கும் பாசத்திற்கும் நடுவே சிக்கித்தவிக்கும் ஒரு பொலிஸ் அதிகாரியின் உணர்ச்சியூட்டும் சித்திரம்! 100 நாட்களுக்கு மேல் ஓடி தென்னகத்தில் பல்லாயிரக் கணக்கான மக்களின் பாராட்டைப் பெற்ற சித்திரம்.

மற்றும்



ஜெயலலிதா, ஜெய்ந்தி

நம்பியார், அசோகன்,

நாகேஷ், ஸ்ரீராம்,

மனோரமா,

பி. கே. சரஸ்வதி

நடித்த

தேவர் பிலிம்ஸ்

முகராசி

டைரக்ஷன் எம். ஏ. திருமுகம்

இசை: திரை இசைத்திலகம் கே. வி. மகாதேவன்

6-வது வாரம்

கிங்ஸ்லி [கொட்டாஞ்சேனை]

லக்ஷ்மி [கரவெட்டி]

ஜெய்சங்கர் — ஜமுனு — நாகேஷ் — பேபி பத்மினி

நடித்த

ஏ. வி. எம்மின் ஜனுதிபதி பரிசுபெற்ற

குழந்தையும் தெய்வமும்

நியூ காலிங்கன் [இணுவில்]

தினசரி 6-30, 9-30 மணி

விடுமுறைதினங்களில் 2-30

சிவாஜி—சாவித்திரி

நடித்த

காத்தவராயன்

[புதியகொப்பி]

மனோகரா

யாழ்ப்பாணம்

Daily at 2-30, 6-30, & 9-45 Pm

Pre Poya & Poya 10-30 a m

தேவானந், சைராபானு, சசிகலா நடித்த

பியார் மொஹபத்

PYAR MOHABBAT

ஹிந்தி (ஈஸ்ட்மன் கலர்)

இசை-சங்கர், ஜெயகிஷர்

REGAL JAFFNA

Daily at 4-40, 7-00 & 9-45 p. m.

Richard Attenborough in 20th Century Fox's

GUNS at BATASI


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மேற்கு ஆசிய விவகாரத்தை விவாதிக்க பந்தோபஸ்து சபையின் அவசரக்கூட்டம்

## ஆசிய - ஆபிரிக்க நாடுகளும் அமெரிக்காவும் சமர்ப்பித்துள்ள இரு தீர்மானங்கள்

நியுயோர்க், நவ. 9

**மேற்கு ஆசிய பிரச்னையை விவாதிக்க ஐ. நா. பந்தோபஸ்துசபையின் அவசர கூட்ட மொன்று இன்று மாலை நடைபெறுகிறது. இக்கூட்டத்தை ஐக்கிய அரபுக் குடியரசு அழைத்துள்ளது.**

சபைக்குமுன்னல் இரண்டு தீர்மானங்கள் உள்ளன. ஒன்று, இந்தியா, மாலி, நைஜீரியா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் கொண்டு வந்துள்ள ஆசிய, ஆபிரிக்க நாடுகள் குழுவின் தீர்மானம். மற்றது, அமெரிக்கா சமர்ப்பித்துள்ள தீர்மானம்.

### ஐ. நா. விசேஷ பிரதிநிதி

இந்த இரண்டு தீர்மானங்களுமே, ஐ. நா. விசேஷ பிரதிநிதி ஒருவர் மேற்கு ஆசியாவுக்கு அனுப்பப்படவேண்டுமென வலியுறுத்துகின்றன.

கடந்த மேற்கு ஆசியப் போரில் இஸ்ரேல் கைப்பற்றிய அரபுப் பிராந்தியங்களிலிருந்து அதன் துருப்புகள் விலகிக்கொள்ள வேண்டுமெனவும், பலஸ்தீன அரபு அகதிகள் பிரச்னை தீர்க்கப்படவேண்டுமெனவும் ஆசிய, ஆபிரிக்க நாடுகளின் தீர்மானம் கேட்டுக்கொண்டுள்ளது.

அமெரிக்கத் தீர்மானம் இஸ்ரேலுக்கெதிரான அரபு நாடுகளின் பகைமை நீக்கப்படவேண்டுமெனக்கேட்டுள்ளது.

### ஐ. அ. கு. எதிர்ப்பு

அமெரிக்க தீர்மானத்தை ஐக்கிய அரபுக் குடியரசு நிராகரித்துள்ளது. அத் தீர்மானத்தில், அரபுப் பிராந்தியங்களிலிருந்து இஸ்ரேல் துருப்புகள் வாபஸ்பெற வேண்டுமெனக் குறிப்பிடப்படாததே இதற்குக் காரணமாகும்.

### எபான் நிராகரிப்பு

இதற்கிடையில், ஐ. நா. விசேஷ பிரதிநிதி எவரையும் இஸ்ரேல் ஏற்றுக் கொள்ள முடியாதுஎனஇஸ்ரேல் வெளியுறவு மந்திரி திரு. எபான் அறிவித்துள்ளார்.

## 'அரிசியை வீணுக்காதீர்'

ரங்கூன், நவ. 8

''அரிசியை வீணுக்காதீர்கள், டிசம்பருக்குள் பற்றுக்குறை ஏற்படும்'' என்று பர்மா மக்களுக்கு பர்மிய அரசாங்கம் ஓர் எச்சரிக்கையை விடுத்துள்ளது.

நபநாட்டில் அரிசி பற்றுக்குறை டிசம்பருக்குள் கட்டாயம் ஏற்படும் என்றும், அதனல் அரிசியை மிகவும் சிக்கனமாகச் செலவு செய்து சேகரித்து வைக்கும்படி அரசாங்கம் பொதுமக்களைக் கேட்டுக்கொண்டுள்ளது.

## அமெரிக்காவில் ஜோர்தான் மன்னர் ஜோன்சனுடன் சந்திப்பு

வாஷிங்டன், நவ. 9

அமெரிக்காவுக்குத் தற்போது விஜயம்செய்துள்ள ஜோர்தான் மன்னர் ஹுசெயின், ஜதிபதி ஜோன்சனை நேற்றுச்சந்தித்து, மேற்கு ஆசிய பிரச்னை பற்றிப் பேச்சுவார்த்தைகள் நடத்தினர்.

இப்பேச்சு வார்த்தைகளின்போது, அமெரிக்க வெளியுறவு மந்திரி திரு. டீன் ரஸ்க்கும் சமுகமளித்திருந்தார்.

## எதிர்க்கட்சிக்கு ஆளும் சந்தர்ப்பம்

### மே. வங்காள முதல் மந்திரி விருப்பம்

கல்கத்தா, நவ. 9

மேற்கு வங்காள சட்டசபையில், ஆளுங்கட்சியான ஐக்கிய முன்னணி, வாக்கெடுப்பில் பெரும்பான்மைப்பலத்தை இழந்தால், சட்டசபை கலைக்கப்பட்டு, இடைத்தேர்தல் நடத்துவதைத்தாம் விரும்பவில்லை என்று முதல் மந்திரி திரு. அஜொய் முக்கர்ஜி தெரிவித்துள்ளார்.

அப்படி ஆளுங்கட்சி பெரும்பான்மைப் பலத்தை இழந்தால், எதிர்க்கட்சிக்கு ஆளும் சந்தர்ப்பம் அளிப்பதே முறையாகும் என்று அவர் கூறியுள்ளார்.

# தென் வியட்னுமில் பலத்த சண்டை

சைகோன், நவ. 9

தென்வியட்னுமில் அமெரிக்கத் துருப்புகளுக்கும் பலமான வடவியட்னும் துருப்புகளுக்குமிடையே கடந்த நான்கு நாட்களாகக் கடுமையான சண்டை நிகழ்வதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இரு பக்கத்திலும் ஆட்சேதம் பற்றிய விபரங்கள் இன்னும் தெரியவில்லை.

ஆனல், நேற்று நடைபெற்ற விமானப்போரில், நான்கு அமெரிக்க விமானங்களைச் சுட்டு வீழ்த்தியுள்ளதாக வடவியட்னும் அறிவித்துள்ளது. இந்த விமானங்களின் இழப்பை அமெரிக்கர் அனுமதித்துள்ளனர்.

# வெளிநாட்டு விவகாரங்களில் கூட்டுச்சேராக் கொள்கை

சானு, நவ. 9

ஏமனில் புதிதாக நிறுவப்பட்டுள்ள ஆட்சி. வெளிநாட்டு விவகாரங்களில் கூட்டுச் சேராக் கொள்கையை அனுசரிப்பதாக வலியுறுத்தியுள்ளது. அத்துடன், ஏகாதிபத்தியவாதத்துக்கு எதிரான போராட்டத்தில் ஆசிய, ஆபிரிக்க நாடுகளுடன் ஊக்கமாக ஒத்துழைப்பதெனவும் அது தெரிவித்துள்ளது.

புதிய ஏமன் ஆட்சி. பழைய ஆட்சியிலும் பார்க்கப்பரந்த

[6-ம் பக்கம் பார்க்க]

# ஈராக்கில் சலால் அரசியல் அடைக்கலம்

பெல்ரூட், நவ. 9

ஏமனில் பதவியிலிருந்து விலக்கப்பட்ட முன்னுள் ஜனதிபதி அப்துல்லா சலால் ஈராக்கில் அரசியல் அடைக்கலம் கேட்டுள்ளார். இத்தகவலை பாக்தாத் ரேடியோ அறிவித்துள்ளது.

ஜனதிபதி சலால், ஈராக்கில் தங்கியிருக்கையிலேயே, அவருக்கெதிராக ராணுவப் புரட்சி ஏமனில் நடத்தப்பட்டது.

# விண்வெளிக் குண்டு பற்றி ரஷ்ய-அமெரிக்க பேச்சுக்கள்

வாஷிங்டன், நவ. 9

ரஷ்யாவின் விண்வெளி வெடிகுண்டைப்பற்றி அந்நாட்டு அரசாங்கத்துடன் அமெரிக்க அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகிறது என்று அமெரிக்க ராணுவ கேந்திரத்தினர் அறிவித்துள்ளனர். ஆனல் பேச்சுவார்த்தைகளின் விளைவுகள் பற்றி எதையும் குறிப்பிட அவர்கள் மறுத்துவிட்டனர்.

தொலைதூர ஜலவாயுக் குண்டு ஏவுகணைகளைவிட விண்வெளிக் குண்டுகளால் அபாயம் அதிகம் ஏற்படாது என்று அமெரிக்க விஞ்ஞானிகள் கருதுகின்றனர். அத்தகைய குண்டு வானவெளியில் விடப்பட்டதும், முதல் வட்டத்திலேயே கண்டுபிடித்து அழிப்பது முடியாத காரியம். ஆனல், பிறகு அதை மடக்கி சமாளித்துவிடலாம் என்ற நம்பிக்கை தெரிவிக்கப்பட்டது.

# லண்டன் எக்ஸ்பிரஸ் ரயில் விபத்து

## ஒடிந்த தண்டவாளத் துண்டே காரணம்

லண்டன், நவ. 9

தெற்கு இங்கிலாந்தில், நவ-5ந் திகதி இரவு ஏற்பட்ட எக்ஸ்பிரஸ் ரயில் விபத்துக்குக்காரணம், ரயில் தண்டவாளத்தின் ஒடிந்த துண்டு ஒன்றே என அறிவிக்கப்பட்டுள்ளது. இவ் விபத்தில் 30 பேர் உயிரிழந்தனர்.

பிரிட்டிஷ் போக்குவரத்து மந்திரி பார்பார கேஸில் நேற்று முன்தினம் பிரிட்டிஷ் காமன்ஸ் சபையில் பேசுகையில், தண்டவாளத்தில்ரயில் தடம் புரண்ட இடத்துக்கு சிறிது தொலைவில் ஒடிந்த துண்டு ஒன்று காணப்பட்டதாகத் தெரிவித்தார்.

இந்தத் தண்டவாளத் துண்டேவிபத்துக்குக்காரணமாக இருக்கலாம் என்று தமக்குத் தெரிவிக்கப்பட்டதாக அவர் கூறினா. முழு விசாரணை நடத்துவதாக உறுதி கூறினர்.

தண்டவாளம் அநேகமாக புதிது என்றும், எனவே ஒடிந்த துண்டு காணப்பட்டது விந்தையாக உள்ளது என்றும், மந்திரி குறிப்பிட்டார். இத்தண்டவாளம் சென்ற வருடம்தான் போடப்பட்டது என்ருர். இவ்விபத்து குறித்து மிகக் கவனமாக விசாரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினர்.

# ஆங்கிலம் பற்றிய நேருவின் வாக்குறுதி காப்பாற்றப்பட மாட்டாது

## இந்திய எம். பி. கவலை

பங்களூர், நவ. 9

உத்தேசிக்கப்பட்டுள்ள இந்திய ஆட்சி மொழி மசோதா திருத்தத்தில், இந்திய மத்திய அரசு, நேருவின் வாக்குறுதியைக் காப்பாற்றும் எனத் தாம் எதிர்பார்க்கவில்லை என்று திரு. பிராங்க் அந்தோனி எம். பி. இங்கு கூறினர்.

சில உப நோக்கங்களுக்கு மட்டும் ஆங்கிலத்தைப் பயன்படுத்துவதற்கே திருத்தம் வழி வகுக்குமென்றே தாம் எதிர்பார்ப்பதாக அவர் மேலும் கூறினர். அது, நேரு திட்டத்தின் திரிப்பு ஆகவே இருக்கும் என்ருர் அவர்.

நேரு வாக்குறுதியை மீற முயற்சி நடைபெறவிருக்கும் பார்லிமெண்டின் மாரிகால தொடரில் பலத்த குழப்பம் ஏற்படுமெனத் தாம் எதிர்பார்ப்பதாகவும் திரு. அந்தோனி தெரிவித்தார்.

## ச. சோ. பிரமுகர் இறந்து கிடந்தார்

### அரசியல் கொலை எனச் சந்தேகம்

உஜ்ஜயினி [ம. பி.], நவ. 9

மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த பிரபல சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சி ஊழியரான திரு. சிவசிங்ஸஸோதியா, அவருடைய கிராமத்தில் இறந்து கிடந்தார். அவருடைய உடல் துண்டு துண்டாகச் சிதைக்கப்பட்டிருந்தது.

கிராமத்தில் 4 தினங்களுக்கு முன், இரண்டு கோஷ்டிகளிடையே நடந்த சண்டைக்குப் பின் திரு. ஸஸோதியா வைக் காணவில்லை. அந்தச்சண்டையில் அவருடைய சகோதரரும் காயமடைந்தார்.

இந்தக்கொலைக்கு ஏதாவது அரசியல் சதி காரணமாயிருக்கலாம் என்று ராஜ்ய ச. சோ. கட்சித் தலைவர் கூறினர். கிராமப் புறங்களில் உள்ள அரசியல் ஊழியர்களுக்கு அரசாங்கம் தக்க பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று அவர் கோரினர்.

# கொங்கோவினுள் பிரவேசித்த வெள்ளைக் கூலிப்படையினர்

## போர்ச்சுக்கல் மீது கொங்கோ குற்றச்சாட்டு

நியூயோர்க், நவம்பர் 9

கொங்கோவில் வெள்ளைக் கூலிப்பட்டாளங்கள் பிரவேசித்துக் குழப்பம் விளைவித்ததை விசாரிக்குமாறு கொங்கோ கோரியதன் பேரில், நேற்று ஐ. நா. பந்தோபஸ்து சபை அவசரமாகக் கூடியது.

இந்த வெள்ளைக் கூலிப் படைகள், போர்த்துக்கேய அங்கோலாவிலிருந்து வந்ததாகவும், அவர்களுக்கு ஊக்கம் அளித்து அவர்களைக் கொங்கோவுக்கு அனுப்பியது போர்ச்சுக்கலே என்றும் கொங்கோ குற்றஞ்சாட்டியது. மற்றும் ஆபிரிக்கப் பிரதேசங்களிலும் இவ்வாறே போர்ச்சுக்கல் குறுக்கீடு நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும் அது புகார் செய்தது.

பந்தோபஸ்து சபை, தனது கூட்டத்தில் பேசுவதற்கென போர்ச்சுகல், கொங்கோ, உகாண்டா, ஸாம்பியா, அல்ஜீரியா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளை அழைத்திருந்தது. ஆனல், இப்பிரதிநிதிகளுக்கு வாக்களிக்கும் உரிமை மட்டும் கிடையாது.

முதலில் பேசிய கொங்கோப் பிரதிநிதி, கூலிப்பட்டாளங்களை ஆபிரிக்க நாடுகளுக்கு அனுப்புவதைப் போர்ச்சுக்கல் போன்ற ஐரோப்பிய நாடுகள் நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்

### பிரிட்டிஷ் பிரதிநிதி

கொங்கோவின் சுதந்திரத்தில் வெளிநாட்டவர் குறுக்கீடு இல்லாது பார்த்துக் கொள்ள வேண்டியது பந்தோபஸ்து சபையின் பொறுப்பாகும் என பிரிட்டிஷ் பிரதிநிதி கூறினர்.

### போர்ச்சுக்கல் மறுப்பு

அங்கோலாவிலிருந்து கொங்கோவுக்குக் கூலிப்பட்டாளங்களை அனுப்பியதென்ற குற்றச்சாட்டைப் போர்ச்சுக்கல் பிரதிநிதி மறுத்தார். உண்மையை விசாரித்தறியுமாறு அவர் சபையைக் கேட்டுக்கொண்டார்.

### மொபுட்டு நடவடிக்கை

இதற்கிடையில், கொங்கோவுக்கு அந்நிய கூலிப் படையினர் அனுப்பிவைக்கப்பட்டதையிட்டு விவாதிக்க, கொங்கோ ஜனதிபதி ஜெனரல் மொபுட்டு, ஆபிரிக்க நாடுகள் ஒற்றுமை ஸ்தாபனத்தின் விசேஷ கூட்டமொன்றை அழைக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

உண்மையைக் கடைப்பிடிக்காமல முன்னேற்றமடைய முடியாது. முன்னேற்றமும் சீர்திருத்தமும் அறநெறியோடு பிணைக்கப்பட்டிருக்கின்றன.

—மகாத்மா காந்தி

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்கஞு
ஐப்பசிமீ 24உ (10-11-67)

## கல்விக்கு ஆபத்து

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பெரிய கல்லூரிகள், பாடசாலைகளில் கல்வி கற்பித்துவரும் விஞ்ஞான கணக்கியல் ஆசிரியர்கள் பலர் வெளிஇடங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டு வருவதாகவும் இதற்கான உத்தரவுகள் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு வெளிமாகாணங்களிலுள்ள வித்தியாதிபதிகளிடமிருந்தே வருவதாகவும் செய்திகிடைக்கிறது. ஆசிரியர் இடமாற்றம் எப்போதுமே பிரச்னையான விஷயம். சாதாரண இடமாற்றமாக இருந்தால் அதைப்பற்றி அதிகம்அலட்டிக்கொள்ள வேண்டியதில்லை. ஆனல் இப்பொழுது இடமாற்ற உத்தரவுகள் கிடைக்கும் ஆசிரியர்கள் குறிப்பிட்ட ஒரு துறையில் அனுபவமும் சிறந்த பயிற்சியும் உடையவர்கள். தெரிந்தெடுத்து இவர்களுக்கு மட்டும் இடமாற்ற உத்தரவுகள் கிடைப்பதற்குக் காரணம் என்ன?

'தென்னிலங்கையிலுள்ள பாடசாலைகளில் விஞ்ஞானகூட வசதிகள் மிகக்குறைவு. ஆனல் வட இலங்கையில் உள்ளபாடசாலைகள் பெரும்பாலும் விஞ்ஞானகூட வசதியுடையவை. இந்த வித்தியாசத்தை நீக்குவதே எனது நோக்கம்' என்று சில மாதங்களுக்கு முன் கல்வி அமைச்சர் தென்னிலங்கையில் பல இடங்களிலும் பேசிவந்ததற்கும் இப்போது வடபகுதியிலுள்ள விஞ்ஞான ஆசிரியர்கள் பலருக்கு இடமாற்றஉத்தரவுகள் வந்துகொண்டிருப்பதற்கும் தொடர்பு இருக்குமோ வெனஐயம்கொள்வதற்கு இடமுண்டு.

வடபகுதி கல்வியில் வெகுவாக முன்னேற்றம் பெற்றிருப்பது பலருக்கும் பொருமையையேற்படுத்தியிருக்கிறது. போட்டியும் பொருமையும் நல்லது செய்வதற்கு வழிவகுக்குமால் நல்லது. கல்வித்துறையில் வடபகுதி பெற்ற முன்னேற்றத்தைப் போன்று தென்பகுதியையும் முன்னேற்ற முன்வந்தால் நல்லது. இதற்கு மாருக தென்னிலங்கையின் நிலைக்கு வடபகுதியின் நிலையையும் குறைக்க முயற்சி செய்வது நாட்டுக்கே நல்லதல்ல.

இந்த அரசாங்கமோ இதற்கு முன்னைய அரசாங்கங்களோ வடபகுதியில் புதிதாக எந்தவொரு பாடசாலையிலும் விஞ்ஞானகூட வசதிசெய்து கொடுக்கவில்லை. இங்குள்ள பாடசாலைகளும் கல்லூரிகளும் ஆசிரியர் பெற்ருேர் மாணவர் முயற்சியால் அடைந்த வளர்ச்சியைக் கண்டு மனம் புழுங்குவது ஏன்?

விஞ்ஞான கணக்கியல் ஆசிரியர்கள் பெருமளவில் ஒரேசமயத்தில் இடமாற்றம் செய்யப்படுவது சிறிய விஷயமல்ல. இது விஷயத்தில் பெற்ருேர், ஆசிரியர், மாணவர் மற்றும் சமய, சமூக, அரசியல் ஸ்தாபனங்களும் விழிப்புடன் ஒன்றுபட்டு நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம்.

ஆசிரியர்கள் அரசாங்க ஊழியர்களாக்கப்பட்டுவிட்டதால் அவர்கள் இதில் முன்வந்து முயற்சிசெய்ய அஞ்சுவர். ஆனல் இங்குள்ள பல கல்லூரிகளின் வளர்ச்சிக்கும் பிள்ளைகளின் முன்னேற்றத்துக்கும் பெரிதும்உழைத்துஇன்று ஓய்வுபெற்றிருக்கும் கல்லூரி அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் அரசாங்கத்தில் பல பொறுப்பான உயர்பதவிகளை வகித்து ஓய்வுபெற்றவர்களாகிய கல்விமான்கள் முன்வந்து கல்வித்துறைக்கு ஏற்பட்டுவரும் பெரும் ஆபத்துக்களைத் தடுக்க முன்வரவேண்டும். இதற்கு கல்விமான்கள் சபையென அரசியல் சலப்பற்ற ஸ்தாபனம் நிறுவும் யோசனை மிகப் பொருத்தமானதே. ஆனல் இதில் தாமதம் நல்லதல்ல.

வார சாரம் — அரசியல் நிருப

# ஆளும் கட்சி ஆட்டம் கண்டால்
# தமிழ் இனத்துக்கே தொல்லை

## தமிழரின் இன்றைய இழி நிலைக்கு யார் காரணம்?



தமிழ்மக்களை எதிர்நோக்கும் கஷ்டங்கள், பிரச்னைகள் பற்றி தமிழரசுக்கட்சித் தலைவர்கள், பிரதமர் திரு. டட்லிசேனநாயகாவைச் சந்தித்துப் பேசினர். இந்தச்சந்திப்பு சென்றசெவ்வாய்க்கிழமை இரவு நிகழ்ந்தது.

இதற்கு முதல்நாள் அதாவது திங்கட்கிழமை, தமிழ்மக்களின் கஷ்டங்கள், பிரச்னைகள் சம்பந்தமாக தமிழ்க்காங்கிரஸ் தலைவர்கள் பிரதமரைச் சந்தித்துப் பேசினர்.

தமிழரசுக்கட்சியும் தமிழ்காங்கிரஸ் கட்சியும் திரு. டட்லிசேனநாயகாவைப்பிரதமராகக் கொண்ட தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகள். வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ்பேசும் மக்களுக்கு இவ்விரு கட்சிகளும் பிரதிநிதித்துவம் வகிக்கின்றன.

தமிழ்மக்களின் குறைகளையும் கஷ்டங்களையும் எடுத்துக் கூறி அவற்றுக்கு நிவர்த்தி தேடுவதற்காக இவர்கள் பிரதமரைச் சந்தித்திருக்கிருர்களென்ருல் ஏன் இரு தரப்பினரும் தனித் தனியாகச் சென்று பிரதமரைச் சந்திக்கவேண்டும்?

மக்களின் குறைகளை எடுத்துச் சொல்வதானல் இரு தரப்பினரும் ஒன்ருகச் சென்று சந்தித்திருக்கலாம்.

தங்கள் கட்சிகளின் எதிர்காலம் பற்றிய கவலையில்தான்இவர்கள்பிரதமரைசந்தித்திருக்கவேண்டும் என்று கருதுவதில் தவறிருக்க முடியாது. தமிழ்மக்களின்நலனை விடக் கட்சிகளின் நலனையே பெரிதாகக் கருதும் மனப்பான்மை என்று இல்லாமற் போகிறதோ அன்றுதான் தமிழ் மக்களுக்கு விடிவு காலம் பிறக்குமென்றுஎதிர்பார்க்கலாம்.



தம்மைச்சந்தித்த தமிழரசுக் கட்சியினருக்குப் பிரதமர்சிலவாக்குறுதிகளை அளித்திருக்கிருர். தமிழ்காங்கிரஸ் தலைவர்களுக்கும சில வாக்குறுதிகளைப் பிரதமர் அளிக்கத் தவறவில்லை. இருதரப்பினரும் ஏதோ திருப்தியோடு திரும்பியிருக்கின்றனர்.

திருக்கோணமலைத் துறைமுகம் தேசியமயமாக்கப்பட்டதை அடுத்து எழுந்துள்ள நிலைமையே பிரதமரை இரு தரப்பினரும் சந்திக்கக் காரணமாக இருந்தது. திருமலைத்துறைமுகத்தைதேசியமயமாக்கக்கூடாது என்பது தமிழரசாரின் கோரிக்கை. அவர்கள் சமர்ப்பித்திருந்த மாற்றுத் திட்டத்தைப் பரிசீலனை செய்வதாகத் தெரிவித்துவிட்டு அவர்களுக்குப் பதில் எதுவும் சொல்லாமலே தேசியமயத் தீர்மானத்தைப் பிரதமர் அங்கீகரித்தார். இது தமிழரசுக்கட்சிக்குள் பெரும் குமுறலை கிளப்பியிருக்கிறது. தேசிய அரசாங்கத்துக்குக் கொடுக்கும் ஒத்துழைப்பைக் கைவிட்டு வெளியேறிவிடவேண்டுமென்ற கோரிக்கை வலுப்பெற்று வருகிறது. இம் மாதம் 15-ம், 16-ம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் தமிழரசுக் கட்சியின் செயற்குழு, பொதுக்குழுக் கூட்டங்களில் 'அரசாங்கத்தை விட்டுதமிழரசுக்கட்சி வெளியேறவேண்டும்' என்ற தீர்மானம் விவாதிக்கப்படவிருக்கிறது. இக் கூட்டத்தில் தமிழரசுக்கட்சியின் தலைமைப் பீடத்தின் மீது இளமட்டங்கள் பாரதூரமான குற்றச்சாட்டுக்களையும் கண்டனங்களையும் தொடுக்கக்கூடும்.

இந்தநெருக்கடியான நிலைமையைச் சமாளிப்பதற்கு தமிழரசுக்கட்சித் தலைமைப் பீடம் தயாராகிக்கொண்டிருக்கிறது. இதில் ஓர் அங்கம்தான் பிரதமரின் சந்திப்பு என்று கூறலாம். அவர் கொடுத்த வாக்குறுதிகளை தலைவர்கள் குழுக்கூட்டத்தில் சொல்லிச் சமாளிக்கலாம்.

மாவட்டசபைகள் அமைக்கப்பட்டு விட்டால் சகல பிரச்னைகளுக்கும்தீர்வுகிடைக்க வழி பிறக்கும். மாவட்டசபை மசோதாவைக் கொண்டுவந்து நிறைவேற்றப் பிரதமர் ஒப்புக்கொண்டிருக்கிருர். அத்துடன் திருமலைத்துறைமுகம் தேசியமயமாக்கப்பட்டாலும் வெளியாருக்கு அங்குவேலைகொடுக்கப்பட மாட்டாதெனவும் பிரதமர் உறுதியளித்திருக்கிருர். மாவட்டசபைகள் அமைக்கப்படும்வரை பொறுத்திருப்போம் எனத் தலைவர்கள் சமாதானம் சொல்லக்கூடும்.

திருக்கோணமலைத் துறைமுகத்தேசியமயம் சம்பந்தமாக தமிழரசுக்கட்சியினர் மீது ஏமாற்றமும் அதிருப்தியும் தோன்றியிருப்பதால் அந்தச் சந்தர்ப்பத்தைத் தமக்குச் சாதகமாக்கிக் கொள்வதற்கு தமிழ்க்காங்கிரஸ் கட்சியினர் பிரதமரைச் சந்தித்து சில வாக்குறுதிகள் பெற்றுக்கொண்டதற்குக் காரணமாக இருக்கலாம்.

விரைவில்நடைபெறவிருக்கும் யாழ்ப்பாண மாநகரசபைத் தேர்தலும் இச்சந்திப்புக்களின் அடிப்படை நோக்கங்களில் ஒன்ருகஇருக்கிறது.

சமஷ்டிக்கொள்கை ஒன்றைத் தவிர தமிழரசுக் கட்சிக்கும் தமிழ்காங்கிரஸ் கட்சிக்குமிடையில் வேறுபாடு அதிகமில்லை. ஆயினும்தமிழ்மக்கள் படிப்படியாக உரிமைகளை இழந்து வருகின்ற போதிலும் இந்த இருகட்சிகளும் ஒருவர்மீது ஒருவர் குறை குற்றங்கூறிவருகின்றனரேயொழிய இழந்த உரிமைகளைப் பெறுவதற்கோ, உள்ள உரிமைகளைப் பாதுகாப்பதற்கோ ஒன்றுபட்டு நிற்கவில்லை. தமிழ்மக்கள் உரிமைகளை இழந்ததற்கு ஒருவர்மீதோ ஒரு கட்சி மீதோகுறைகுற்றம்சொல்ல இனியும் இடமில்லை. தலைவர்கள் எல்லோருமே பழி சுமக்கவேண்டியே வரும். தமிழ்த் தலைவர்களின் வேற்றுமை மற்றவர்களுக்குச் சாதகமாகவும் தமிழினத்துக்குப் பாதகமாகவும் முடிகிறது.

### பிரதமர்கூட்டும் மகாநாடு

திருமலைத்துறைமுக தேசியமயம் சம்பந்தமாக தமிழரசுக்கட்சிக்கும் யு.என்.பி.க்குமிடையில் கருத்து வேற்றுமையேற்பட்டிருப்பதும், ஐக்கியதேசியக கட்சிக்குள்ளேயே ஜே.ஆர்-டட்லி கோஷ்டி எனப் பிளவு ஏற்பட்டிருப்பதாக வெளிவந்த செய்தியும் எதிர்க் கட்சியினருக்கு மகிழ்ச்சியைக் கொடுத்துள்ளது. தேர்தலுக்குத் தயாராக அவர்கள் இருக்கிருர்கள். பிரதமர் திரு. டட்லிசேனநாயகா தேர்தலை எதிர்நோக்கும் நிலையிலில்லை வேலையில்லாத் திண்டாட்டம் குறையவில்லை; வாழ்க்கைச் செலவு



உயர்ந்துகொண்டே போகிறது; தேசிய ஐக்கியம் கூட சரியாக நிலைநாட்டப்படவில்லை; தேர்தல்கால வாக்குறுதிகள் எதுவுமே நிறைவேற்றப்படவில்லை. இந்நிலையில் தேர்தல் வந்தால் பிரதமர் என்னதான் பிரசாரம் செய்தாலும் திருமதி பண்டாரநாயகாஅமோகவெற்றி பெறுவார் என்பது நிச்சயம்.

கட்சிக்குள் தோன்றியுள்ள கோஷ்டிப் பூசலுக்கு முடிவு காண்பதற்கு திரு டட்லி உடனடியாக முயற்சி எடுத்து திரு.ஜே.ஆர்.ஜயவர்த்தனவுடன் தனியாகப் பேசியது விவேகமான செயல்தான். தேசிய அரசாங்கத்திலுள்ள கட்சித் தலைவர்கள் எல்லோரையும் கொண்ட மகாநாடு ஒன்றையும் இன்னும் இரண்டொரு தினங்களில் பிரதமர் கூட்டவிருக்கிருர். பிரதமரின் நிலை மிகவும் சங்கடமானது. ஆயினும் நிலைமையைச் சமாளித்து அரசாங்கத்தைஸ்திரப்படுத்தாவிட்டால் எதிர்காலம் ஆளும் கட்சிக்கு மட்டுமல்ல நாட்டுக்கே நல்லதாக இருக்காது.

இந்தச்சமயத்தில் ஆட்சிபீடம் ஆட்டம் கண்டு பொதுத்தேர்தல் நடைபெற்ருல் தமிழ் மக்களே பெரிதும் பாதிக்கப்படக்கூடும். ஆளும் கட்சியில் தமிழ்க் கட்சிகள் சேர்ந்திருந்த போதிலும் சில முக்



ஒ... விஷயங்களி...
எதிர்க்கட்சியினர...
யையும் ஒத்துழைப்...
தனிப்பட்டமுறையில்...
வார்த்தை நடத்திய...
நட்புறவைக் கொண்ட...
ருந்தால் எந்த ...
தய... இரு...
ஆனல்...

### துணிச்சலும் உறுதியும்

பல்வேறு கொள்...
யுடைய பல கட்சிக...
கொண்ட 'தேசிய அ...
கம்' ஒன்றைப் பி...
திரு. டட்லிசேனந...
1965-ம் ஆண்டில் அ...
போது வேற்றுமையி...
ருமைகாண முடியும்...
நம்பிக்கையும் இலங்...
மீண்டும் தேசிய ஐ...
ஏற்பட்டு நாடு முன்...
றப்பாதையில் கால்...
எடுத்துவைக்கும்என்...
பிக்கையும் தோன்...
தேசிய அரசாங்...
கப்பட்டதும் பிரதம...
இதரபல அமைச்ச...
அரசாங்கத்தைச் ...
எம்.பி.க்கள் பல...
தேசிய ஐக்கியத்தின்...
யத்தை பொதுமே...
ளில் வலியுறுத்திப்பே...
னர். தமிழரசுக்கட...
கல்முனை மகாநாட்...
ந்து கொண்டு உரை...
திய பிரதமர், ஓர்...
தின் (சிறுபான்மை...
உரிமைகளை மறுத்து...
பதவியிலிருக்க வே...
மென்ருல் அந்தப்...
யையேஉதறித் தள்...
டுப்போகத்தயாராக...
தாகக் கூறினர்.


காலஞ்சென்ற ப...
நாயகா கொண்...
நிறைவேற்றிய ...
மொழி உபயோக (...
சட்டத்துக்கு வி...
கொண்டுவரப் போ...
முன்னைய திருமதி...
பண்டாரநாயகாவின்...
சாங்கம் கூறிவந்த...
லும் அவற்றைக்...
வரத்தவறியது. இந்...
மொழிச்சட்டத்துக்...
கள் கொண்டுவருவ...
னைய ஆட்சியாளரா...
றைய எதிர்க்கட்...
கடும் எதிர்ப்பு...
வித்தபோதிலும் ...
திரு. டட்லி சேன...
துணிச்சலுடன் அவ...
கொண்டுவந்து நிற...
றினர்.

''வாக்குறுதிகள் ...
மாட்டேன். ...
கொடுத்த வாக்கு...
நிறைவேற்றுமல் வி...
டேன்'' என்று ...
தமிழ்மொழிச் சட்ட...
கொண்டு வந்த ...
எதிர்க்கட்சியின ...
பதில்கொடுத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...சியல் நிருபர்

# ...டால் ...ால்லை



கொ... விஷயங்களிலாவது எதிர்க்கட்சியினரின் உதவியையும் ஒத்துழைப்பையும் தனிப்பட்ட முறையில்பேச்சு வார்த்தை நடத்தியாவது நட்புறவைக் கொண்டாடியிருந்தால் எந்த நிலைக்கும் தய[illegible] இரு[illegible]டியும். ஆனால்...

## துணிச்சலும் உறுதியும்

பல்வேறு கொள்கைகளையுடைய பல கட்சிகளையும் கொண்ட 'தேசிய அரசாங்கம்' ஒன்றைப் பிரதமர் திரு. டட்லிசேனநாயகா 1965-ம் ஆண்டில் அமைத்த போது வேற்றுமையில் ஒற்றுமைகாண முடியும் என்ற நம்பிக்கையும் இலங்கையில மீண்டும் தேசிய ஐக்கியம் ஏற்பட்டு நாடு முன்னேற்றப்பாதையில் கால் அடி எடுத்துவைக்கும்என்ற நம்பிக்கையும் தோன்றியது. தேசி[illegible] அரசாங்[illegible] அமைக்கப்ப[illegible]தும் பிர[illegible]மர்முதல் இதரபல அமைச்சர்களும் அரசாங்கத்தைச் சேர்ந்த எம்.பி.க்கள் பலரும்கூட தேசீய ஐக்கியத்தின் அவசியத்தை பொதுமேடைகளில் வலியுறுத்திப்பேசிவந்தனர். தமிழரசுக்கட்சியின் கல்முனை மகாநாட்டில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய பிரதமர், ஓர் இனத்தின் (சிறுபான்மையினர்) உரிமைகளை மறுத்துத்தான் பதவியிலிருக்க வேண்டுமென்றால் அந்தப் பதவியையேஉதறித் தள்ளிவிட்டுப்போகத்தயாராகஇருப்பதாகக் கூறினர்.

காலஞ்சென்ற பண்டாரநாயகா கொண்டுவந்து நிறைவேற்றிய தமிழ்மொழி உபயோக (விசேஷ) சட்டத்துக்கு விதிகள் கொண்டுவரப் போவதாக முன்னைய திருமதி சிறிமா பண்டாரநாயகாவின் அரசாங்கம் கூறிவந்த போதிலும் அவற்றைக்கொண்டு வரத் தவறியது. இந்த தமிழ் மொழிச்சட்டத்துக்கு விதிகள் கொண்டுவருவதைமுன்னைய [illegible]ட்சியாளரான இன்றைய எதிர்க்கட்சியினர் கடும் எதிர்ப்புத் தெரிவித்தபோதிலும் பிரதமர் திரு. டட்லி சேனநாயகா துணிச்சலுடன் அவற்றைக் கொண்டுவந்து நிறைவேற்றினர்.

''வாக்குறுதிகள் கொடுக்க மாட்டேன். ஆனல் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ருமல் விடமாட்டேன்'' என்று பிரதமர் தமிழ்மொழிச் சட்டவிதிகள் கொண்டு வந்த போது எதிர்க்கட்சியினருக்குப் பதில்கொடுத்தார்.

பிரதமரின் உறுதியையும் துணிச்சலையும் கண்டு நாடே வியந்தது. சிறுபான்மையினருக்கு அதிக நம்பிக்கையும் பிறந்தது. ''டட்லி இப்போது பழைய டட்லி அல்ல'' என்று பலரும் பேசிக்கொண்டனர்.

''மாவட்டசபைகள் அமைப்பதற்கான மசோதாவையும் கொண்டுவருவேன். முன்னைய அரசாங்கங்கள் கொண்டுவருவதற்கிருந்த அதிகாரங்களைவிட மிகக் குறைந்த அதிகாரங்களை உடைய மாவட்டசபைகளையே நான் அமைப்பேன்'' என்றும் பிரதமர் தெரிவித்தார்.

ஆனல்இதுவரை மாவட்டசபை மசோதா கொண்டுவரப்படவில்லை. ஆளும் கட்சியைச்சேர்ந்த சிலரே மாவட்டசபைகளுக்கு வெளிப்படையாக எதிர்ப்புத்தெரிவித்தனர். சர்ச்சை பெரிதானது. ''இன்னும் மாவட்டசபை மசோதா தயாரிக்கப்படவில்லை. தமிழரசுக்கட்சியினர் அது பற்றி என்னுடன் ஆலோசனை நடத்திவருகின்றனர்'' என்று பத்திரிகை நிருபர்களின் மகாநாடு ஒன்றைக் கூட்டி பிரதமர் தெரிவித்தார். இதன் மூலம் சர்ச்சை பெரிய பிரச்னையாகாமல் தடுத்துவிட்டார்.

ஆனல், தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்ட சமயத்தில் அவர்காட்டிய உறுதியும், துணிச்சலும் குறைந்தது; ளர்ந்தது. இதை ஆளும் கட்சிக்குள்ளே இருக்கும் சிலரும் எதிர்க்கட்சியினரும் பிரதமரின் பலஹீனமாக எடுத்துக்கொண்டனர். பிரதமரும் அதற்கேற்றமுறையில் சில சமயங்களில் நடந்துகொண்டார் என்று கூறுவதில் தவறிருக்க முடியாது.

நிலைமை நெருக்கடியான கட்டத்தை அடைந்திருக்கிறது. பிரதமரும் ஆளும் கட்சியைச் சேர்ந்த இதர தலைவர்களும் அரசியல் ஞானத்துடன் விவேகமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டிய கட்டம் இது. மந்திரிசபையைத் திருத்திஅமைப்பதும் அவசியம்.

தமிழ்த் தலைவர்கள் தங்களுக்குள் உள்ள வேறுபாடுகளை மறந்து ராஜதந்திரத்துடன் ஒன்று பட்டு நிற்கவேண்டிய சமயமும் இதுவே.

# இயமனை இறைவன் உதைத்த திருநாள்

## நல்லூர் சிவன்கோவிலில் இன்று நடைபெறும் இயமசங்கார விழா

— பா. சிவராமகிருஷ்ணன் —

இந்துக் கோவில்களில நடைபெறும் கிரியைகள் யாவும் திருவுருவங்களை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப் பெற்றவை. இத்திருவுருவங்களை மையமாகக் கொண்டே நித்திய, நைமித்திய காமியக் கிரியைகள் எல்லாம் செயல்படுத்தப்படுகின்றன. இறைவன் கொண்டகோலங்கள்யாவும் சில நிகழ்ச்சிகளைப் பற்றியனவாய், சில இதிகாசபுராண சம்பவங்களைச் சித்தரிக்கும் வண்ணம் உருவாக்கப்பட்டுள்ளன. கோவில்களும் அங்கு நடைபெறும் விழாக்கள், பூஜைகள் போன்றவை தனி மனிதனுக்கென அமையாது, அடியார்கள் அனைவரும் சென்று வழிபடும் பொருட்டு அமைந்தவையே.

புராணங்கள் இறைவனது வீரச்செயல்களை மையமாகக் கொண்ட நிகழ்ச்சிகளையே பெரும்பாலும் விளக்கிக் கூறுவன இவற்றுள் மிக முக்கியமானவை எனக்கூறப் படுபவை எட்டுச் செயல்கள். இவை அட்ட வீரட்டங்கள் எனப்படும். பிரமன் தலை கொய்தது, அந்தகனை அழித்தது, முப்புரங்களை செற்றது, தக்கன் செருக்கை அடக்கியது, சலந்தரனைச் சங்கரித்தது, கஜாசுரன் தோலுரித்தணிந்தது, காமனை காய்ந்தது, இயமனை உதைத்தது' என்பவையே வீரஅட்டச் செயல்கள். இவை நடைபெற்ற இடங்களும், சம்பவங்களும் பின்வரும் பாவினால் அறியலாம்

'பூமன் சிரம் கண்டி அந்தகன் கோவல் புரம் அதிகை
மாமன் பறியல் சலந்தரன் விறகுடி மாவழுவூர்
காமன் குறுக்கை இயமன் கடவூர் இக் காசினியில்
தேமன்னு கொன்றையும் திங்களும் சூடி தன் சேவகமே'

இயமனைக் காலால் உதைத்ததை, திருவிழாவாகத் திருக்கடவூரில் சித்திரை மாதத்தில் கொண்டாடி, இயமசங்காரத்தை விமரிசையாகக் கொண்டாடுவர்.

இலங்கையில், நல்லூர் சிவன் கோவிலில் ஐப்பசி மாதத்துக்கடைசி வெள்ளிக்கிழமையன்று இயம சங்காரத் திருவிழா வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. இலங்கையிலே இக்கோவிலில் மாத்திரமே இத்திருவிழா நடாத்தப்பட்டுவருகின்றதென்பது குறிப்பிடத்தக்க தொன்ருகும்.

### கோவில் நடைபெறும் வைபவம்

மூன்று மணியளவில் கோவிலில் சாயரட்சைப் பூசை மங்கள வாத்திய இன்னிசை முழங்க, மணி சேகண்டி, சங்கம் போன்ற வாத்தியங்கள் கோஷிக்க, முப்புரி நூலோர் வேத மந்திரங்கள் ஓத நடைபெறும்.

நான்குமணியளவில் இயமதூதனின் திருவுருவத்தினை முதலில் கோவில் வாசலுக்கு வெளியே அன்பர்கள் எழுந்தருளச் செய்துவிடுவார்கள்.

பின் மார்க்கண்டேயர், சிவலிங்கத்தைப் பூஜைசெய்யும் பாவனையாக அலங்கரிக்கப்பட்டிருக்கும் திருவுருவங்களைக் கொண்ட பீடத்தை கோவிலிலிருந்து வெளியே பக்தர்கள் கொண்டுவருவார்கள்.

நாகாபரணத்தைக் குடையாக அணிந்திருக்கும் சிவலிங்கத்தை மெய்யடியோனுகிய மார்க்கண்டேயர் பூஜைசெய்யும் பாவனையாகச் சித்தரித்து அலங்காரம் செய்யப்பட்டிருப்பது பக்தர் பார்த்துப் பரவசப்படவேண்டிய தொன்ருகும். மார்க்கண்டேயர் சிவபூஜை செய்யும் பாவனையாகக் கொண்டதை கோவில் வாசலிலிருந்து வெளியே கொண்டுவரு பொழுது இயமதூதன் மார்க்கண்டேயருடைய உயிரைக்கவரும் பொருட்டு அருகில் வருகிருன். ஆனல் 'சிவபூஜையில் உள்ளோரின் உயிரைப்பறிக்கக்கூடாது' என எண்ணித் திரும்பி இயமனிடமே சென்று முறையிடுகிருன். இதனைக்காட்டுவதாக அமைகிறது திருவிழாவின் முதல் அங்கம்.

இயமதர்மராஜன், மார்க்கண்டேயரின் உயிரைக்கவர நேரில் புறப்பட்டுவருவதாக உள்ளது புராணக்கதையில். இதனைத்தத்ரூபமாக இத்திருவிழாவில் சித்தரிப்பதைக் காணலாம். கதாயுதம், சூலாயுதம், பாசக்கயிறு போன்றவை சகிதம் கோவிலிலிருந்து இயமதர்மராஜன் [illegible] வாகனத்தில் அமர்ந்[illegible] தருளச்செய்வர் இயமனுக்குக் கூறப்பட்டுள்ள அங்க லட்சணங்களில், இம்மியளவேனும்பிசகாது அமைக்கப்பட்டுள்ளது அத்திருவுருவம்.

மார்க்கண்டேயர் சிவபூஜைசெய்யும் பாவனையாக உள்ள சுவாமியையும், பெரியதொரு லிங்கமாகக் காட்சிதரும் சுவாமியையும் கோவிலுக்குக் கீழேயுள்ள நாற்சந்திக்கு எழுந்தருளச் செய்வர். பின் இயமதர்மனையும் அங்கு எழுந்தருளச் செய்து சுவாமியை மும்முறை வலம் வரச்செய்வர்.

பின் சுவாமியை கோவிலுக்கு மேற்கேயுள்ள அரசடிச்சந்திக்கு எழுந்தருளச் செய்து அங்கேயும் முன்பு நடாத்தியதைப்போல, சுவாமியின் பின்னல் இயமதர்மனையும் எழுந்தருளச் செய்து மும்முறை வலம் வரச்செய்வர்.

இதன்பின் சுவாமியைக் கோவில் வாசலுக்கு எழுந்தருளச் செய்து, அவ்வாறே இயமனையும் அங்கு கொண்டுவருவர். இக்காட்சி, தன் நிலைமறந்து சிவபூஜையிலே ஒன்றி அதில் ஈடுபட்டிருக்கும் மார்க்கண்டேயருடைய உயிரைக் கவர, இயமன் முயற்சி செய்வதை நன்குபிரதிபலிக்கின்றது மெய்யடியார்களின் உயிரைப் பூஜையின்போது கவர்வது இறைவனை நிந்திப்பதற்கு ஒப்பாகும்.

கோவில் வாசலில் இயமதர்மன், மார்க்கண்டேயரது உயிரைக்கவரும் பாவனையாக அன்றையத் திருவிழாவைத்தலைமைதாங்கி நடாத்தும் பிரதமகுரு, இயமனுடைய கையிலிருக்கும் பாசக்கயிற்றை எடுத்து வீசும்போது, அது இலிங்க ரூபமாக இருக்கும் சுவாமி மேல்பட, அது வெடித்து, அதற்குள் இருந்து காலைத் தூக்கிநின்ருடும் நடராஜப் பெருமான்காட்சி தருவதுபார்த்து அனுபவிக்க வேண்டிய தொருகாட்சியாகும்.

இடதுகாலால் உதைக்கப்பட்ட இயமதர்மன்எருமைக் கடாவின் மீதே உருண்டு, மேல்நோக்கிய தலையனுகக் காட்சி தருவான்.

''மார்க்கண்டற்காக
மறலி பட்ட பாட்டை
உன்னிப்
பார்க்கில் அன்பர்க்
கென்ன பயங்காண்
பராபரமே''
— தாயுமானவர்.

# குழந்தைக்கு கும்மாளம் சுண்டெலிக்கு சீவமோசம்;

## 'கொல்லான் புலாலை மறுத்தானை கைகூப்பி எல்லா உயிரும் தொழும்'

பிற உயிரை கொல்லாதவர்களையும் மாமிசம் உண்ணுதவர்களையும் எல்லா ஜந்துக்களும் கைகூப்பி வணங்கும் என்று திருவள்ளுவர் கூறுகிருர். ஆண்டவன் படைப்பில் உயிர்கள் எல்லாம் சமமானவை என்று கருதி, ஈ, எறும்பு முதலிய சின்னஞ் சிறிய உயிர் ஜீவன்களுக்கும் இம்மியேனும் துன்பம் உண்டு பண்ணுத அஹிம்சா ஞானிகளுக்கு விஷ ஜந்துக்கள் கூட தீமை செய்ய மாட்டா.

எனக்கு தெரிந்த ஒரு பழுத்த முதியவர் முழுக்க முழுக்க அஹிம்சாஞானி. புலிமுகச் சிலந்தி, நண்டுவாய்க்காலி, புடையன் பாம்பு முதலிய கொடிய விஷப் பிராணிகள் நடமாடும் இந்த மாரிகாலத்தில் கூட அவர் தரையில் பாய் விரித்துப் படுத்துக்கொண்டு பாரதம் வாசிப்பார். அவருடைய 'லாந்தர்'வெளிச்சத்தால் கவரப்பட்டுபல விஷ ஜந்துக்கள் அவரைச் சுற்றி நடமாடும். அவர் ஒன்றையும் தொடமாட்டார். அவையும் அவரைத் தொட மாட்டா!

திருவள்ளுவர் குறள் செய்த காலம் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பு. மேலே இவர் சொன்ன முதியவரின் காலமும் சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன்பு.

இன்று, நிகழும் 1967-ம் வருடம் நவம்பர் மாதத்தில், காலம் எவ்வளவோ மாறி விட்டது. ஜனத்தொகை ஜெட்வேகத்தில் பெருக்கிறது. பூமியில பிறக்கும் மானிட ஜீவன்களுக் கெல்லாம் போதிய உணவு கிடையாது. புதிய புதிய ஆகார வகைகளைத் தேடி மனிதர் அலைகிருர்கள். தரையில் முளைக்கும் புல்லிலிருந்து கடலில் இருக்கும் பாசியிலிருந்தும் கூட மனிதப்பசியைத் தீர்க்க உணவு எடுக்க முடியுமா என்று விஞ்ஞானிகள்போராடுகின்றனர்.

இந்த நிலையில் முன்னையைவிட கூடுதலான ஆடு,மாடு முதலிய விலங்கினங்கள் மனித பட்சணமாகின்றன. இதை ஒரு தவிர்க்க முடியாத, அவசியமான தீமை என்றே கருத வேண்டும்.

உயிர்க்கொலை தான், ஆயினும் அதில் கூட சற்றே கருணை தாட்சண்யம் இருக்க வேண்டுமல்லவா?

கொழும்பிலுள்ள இறைச்சி கடைகளுக்கு மாமிசம அனுப்புகின்றவர்கள் முதலில் மிருக ஜாதிகளை ஓரிடத்திற்குக் கொண்டு போய், அவை மனிதர்உண்பதற்குத் தகுதியானவையா என்று அரசாங்க அதிகாரிகளால் பரிசோதிக்கப்பட்ட பின்னரே இறைச்சிக் கடைகளுக்கு விற்கலாம்.

இந்தப் பரிசோதனையின் போது சில மிருகங்கள் நோய்வாய்ப் பட்டவையாயோ அல்லது வேறு காரணங்களினலோ மனித போசனத்துக்கு தகுதியற்றவை என்று காணப்பட்டால் அங்கே அந்த பிராணியின் வால் நுனியை வெட்டி விட்டுத்திருப்பி அனுப்புகிருர்களாம். திரும்பவும் அந்த மிருகத்தை கொண்டு வரமாட்டார்கள் என்று அத்தாட்சிப் படுத்துவதற்காகவே இவ்விதம் செய்கிருர்களாம்

இதைப்போல் கொடுமை வேறு எங்கே இருக்கப் போகிறது?

ஆண்டவன் மாட்டுக்கு வாலைப் படைத்தது ஒரு காரணத்தோடு. ஈ, இலையான் முதலிய இரத்தமுறிஞ்சிகளைக் கலைப்பதற்காக. அதை வெட்டி குறுக்கி விட்டால் அது தன் வாழ்நாள் முழுவதும் கஷ்டப படவேண்டுமல்லவா?

வாலை வெட்டுவதற்குப் பதிலாக அந்த வாயில்லாத ஜந்துவில் குறி சுடுவது போல ஏதாவதொரு அடையாளம் வைக்கப் படாதா?

மிருக ஜாதிகளுக்கு மனிதன் செய்யும் அக்கிரமம் இதைப்போல இன்னும் அனந்தம் உண்டு. ஆமையைப் புரட்டி வைத்து கிறிக் கிழித்தல், நுகப் புண்ணுள்ள மாட்டையும் வண்டியில் கட்டி பாரம் சுமத்தல். பலிக்கென்று கொண்டு போய் நல்ல விலை கிடைக்கா விட்டால் ஆட்டின் காதைவெட்டுதல்-இப்படிப் பல அநீதிகள்.

வாயில்லா ஜன்மங்கள் என்ன செய்யும்? மனிதனுகிய எஜமான் செய்வதெல்லாவற்றையும் சகித்து வருந்திக் கொண்டிருக்கும்.

ஆறறிவு படைத்த மனிதன் ஐந்தறிவுள்ள மிருக ஜாதிகளை இப்படி சித்திரவதை செய்வது தெய்வத்துக்கு அடுக்காது.

# நாட்டிலும் நகரிலும்

— 'வழிப்போக்கன்' —

## இன்றைய பலன்

10-11-67

வெள்ளிக்கிழமை

ஐப்பசிமாதம் 24-ந் திகதி

நட்சத்திரம்- அவிட்டம் பி. ப. 2-12 மேல் சதயம்

திதி- நவமி பி. இரவு 12-28 மேல் தசமி

சுபநேரம்- 6-05 — 7-35

ராகுகாலம்- 10-35 — 12-05.

மேஷம்- அரச பயம், அவதானம் வேண்டும்.

ரிஷபம்- பந்தமும் பாசமும் பண்புடன் வரும்.

மிதுனம்- இதயபேரிகை இன்பநாள்.

கடகம் - மூர்க்கர் தொல்லை, மூளைக்குவேலை.

சிம்மம் - இதயதாகம், இல்வாழ்வில் மோகம்.

கன்னி-உபகாரச்சிந்தை உரிமை தடைப்படும்.

துலாம் - பொதுசனத் தொடர்பு, பெருமையுமுண்டு.

விருச்சிகம்-வணிகவல்லபம், வரவில் திருப்தி.

தனுசு - விழி திறக்கும், வழி பிறக்கும.

மகரம் -நம்பிக்கெடுதல் நஷ்டமடைதல்.

கும்பம் - குடும்பக் கவலை, கொள்கையில் ஆட்டம்.

மீனம் - அதிகார பலம், ஆக்க விருத்தி.

—சோதிடக் கலாநிதி—
திருமலை வேலுப்பிள்ளை

ஆசிரியருக்குக் கடிதம்

## திருவாதிரை எப்பொழுது?

யாழ்ப்பாணம் இரகுநாதையர் பஞ்சாங்கத்தில் மார்கழி மாதம் 3-ம் திகதி திங்கட்கிழமை காலை நடேசர் ஆருத்திராதரிசனமெனக் குறிக்கப்பட்டிருக்கிறது. ஆனல் கஞ்சனூர் சுத்த வாக்கிய பஞ்சாங்கத்திலும், ஆனந்தபோதினி சுத்த திருக்கணித பஞ்சாங்கத்திலும், ஆர்க்காடு பஞ்சாங்கத்திலும், வேறு பஞ்சாங்கங்களிலும் மார்கழி மாதம் 30-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆருத்திராதரிசனமெனக் குறிக்கப்பட்டிருக்கிறது பஞ்சாங்கங்கள் முரண்படுவதனல் ஆருத்திராதரிசன நாள் சம்பந்தமாக ஒரு முடிவுக்கு வரமுடியாமல் சைவ உலகம் அங்கலாய்த்துக்கொண்டிருக்கிறது. ஆகையால் எந்தத் தேதியில் ஆருத்திராதரிசனம் நிகழுவது சாஸ்திர சம்மதமானதென்பதை அறிஞர்கள் பத்திரிகை வாயிலாக அறிவித்தால், அது சைவமக்களுக்குப் பெரும் பயனளிக்கும்.

க. வைத்தீஸ்வரக்குருக்கள்.
துணவி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஜி. ஸி. ஈ.

# தமிழ் மொழி

('அ' பாடத் திட்டம்)

## மாதிரி வினக்கள்

1. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிக:-

(I) அண்மையில் உமது கிராமத்தில் நிகழ்ந்த சமயக் கொண்டாட்டத்தைப்பற்றி பத்திரிகைக்கு ஓர் அறிக்கை எழுதுக?

(II) நீர் பாராளுமன்ற அங்கத்தவராகத் தெரிவுசெய்யப்பட்டால் யாது செய்வீர் என்பதை விபரமாகக் கூறுக?

(III) "அடம்பங் கொடியும் திரண்டால் மிடுக்கு" என்பதை அடிப்படையாகக் கொண்டு ஒரு கதை எழுதுக?

(IV) "விஞ்ஞானமும் வாழ்க்கையும்" என்பதுபற்றி ஒரு கட்டுரை எழுதுக?

(V) "மாணவர்கள் அரசியலிற்பங்கு பற்றக்கூடாது" இதற்குச் சார்பாகவும் எதிராகவுமுள்ள உமது கருத்துக்களைத் தருக?

(VI) இப்பொழுது இலங்கையிலேற்பட்டுள்ள உணவுப் பொருள் பற்றுக்குறையைப் போக்குவதற்கு நீர் கூறும் ஆலோசனைகளை விபரமாக எழுதுக?

2. பின்வரும் உரைப்பகுதியின் சாரத்தை மூன்றிலொருபங்காகச் சுருக்கி எழுதுக?

பெரும்பாலும் உலகத்தின்கண் நடக்கும் எல்லா முயற்சிகட்கும் கல்வியானது முதன்மையாகவேண்டப்பட்டு உடம்பைப் பாதுகாப்பதேயாயினுஞ் சிறப்பாக நோக்குங்கால் கல்வி உயிரைப் பாதுகாத்து வளர்ப்பதற்கே கருவியாயிருக்கின்றது. கைத்தொழிலோ எவ்வளவு நுட்பமாகச் செய்யப்படினும் அஃது உடம்பைப் பாதுகாக்கு முகத்தால் உயிர்க்குஞ் சிறிது பயன்படுமேயல்லது அது கல்விபோல் உயிர்க்கு நேரே பயன்படுவதன்றும. ஆகவே, கல்வி ஒன்றுமே உயிர்க்கு நேரே பயன்படுவதாமென்பதுங் கைத்தொழிலோ உடம்பிற்கு நேரே பயன்படுவதாமென்பதும் அறிதல்வேண்டும். எத்தொழிலைச் செய்வதாயிருந்தாலும் அதற்கு அறிவுவேண்டியிருக்கின்றது. அறிவில்லாமல் எவரும் எதனையும் செய்தலியலாது. அறிவுடையவன் தானெடுத்த ஒரு தொழிலைச் செவ்வையாகச்செய்து முடித்தலும், அறிவில்லாதவன் தான் துவங்கியதொன்றை ஒழுங்காகச் செய்யமாட்டாமற் பிழைபட்டு வருந்துதலும், நாம் நாடோறும் காண்கின்றோம் அல்லேமோ? அறிவில்லான் பிழைபட்டுச் செய்யமாட்டாத ஒரு தொழிலை அறிவுடையான் திருத்தமாக்கி விரைவிற் செய்துமுடிப்பதனைக்கண்டு நாம் எவ்வளவு மகிழ்கின்றோம். அப்போது அவன் அறிவின்திறத்தைக் கண்டு எவ்வளவு வியப்படைகின்றோம். இத்துணைச் சிறந்த அறிவை எவருமே இயற்கையாகவே பெற்றுக்கொள்ளல் இயலாது. ஏனென்றால். எல்லா உயிர்களின் அறிவையும் அறியாமை என்னும் ஒரு பேரிருள் மறைத்துக்கொண்டிருக்கின்றது. இருளைப்போக்குதற்கு ஒளியினுதவி கட்டாயமாக வேண்டப்படுதல்போல நமதறிவை மயக்கும் அறியாமை இருளைப் போக்குதற்குங் கல்வியாகிய விளக்கம் இன்றியமையாது வேண்டப்படுகின்றது. கல்வியில்லாதாரிற் சிலரும் அறிவுடையோராக இருக்கக் காண்கிறோமேயென்றால், அவர் அறிவுடையார் செய்யும் செயல்களைப் பார்த்தும், பழகியும் சிறிது அறிவுடையாராகக்காணப்படினும் அவர் போலியாகப்பெற்ற அச்சிற்றறிவை மேன்மேற் பெருகச்செய்தற்குக் கல்வியில்லாமையால் அவர் அறிவு பயனின்றாய்க் கழியும்.

3. பின்வருஞ் செய்யுள்களை வாசித்து அவற்றின் கீழுள்ள வினக்களுக்கு விடைதருக:-

[குசேலரின் மனைவி சுசீலை உண்ண உணவின்றி வாடும் பிள்ளைகளைக்கண்டு அல்லலுறல்.]

(அ) ஒருமகவுக் களித்திடும் போதொருமகவு கைநீட்டு
முந்தி மேல்வீழ்ந்
திருமகவுங் கைந்நீட்டு மும்மகவுங் கைநீட்டு மென்
செய்வாளால்
பொருமி யொருமகவழுங் கண் பிசைந்தழு
மற்றொருமகவு புரண்டு விழாப்
பெருநிலத்திற் கிடந்தழு மற்றொரு
மகவெங்ஙனஞ் சகிப்பாள் பெரிதும் பாவம்.

[ஆ] இவ்வண்ணங் கலாய் விளைக்கும் மைந்தர்களை
நனிநேனுக்கி யிரங்கி யேங்கிச்
செவ்வண்ணக் கரதலத்தா லணைத்து மடித்தலத்
திருத்திச் சிறப்புச்செய்து
மைவண்ணக் கண்ணீரைத் துடைத்து முகம்
வெரிந்புறந் தைவந்துமாம்பல்
அவ்வண்ணவாய் முத்தங்கொண்டு நயந்தோர்
விதத்திலாற்றல் செய்வாள்.

[வெரிந்புறம் - முதுகுப்புறம். தைவந்து-தடவி.]

சுசீலை குசேலருக்கு எடுத்துரைத்தல்

(இ) கற்புடையவருந்ததியே முதல் மடவார் புகழவரும்
கற்பின் மிக்காள்
பொற்பமையா மிடியென்னுஞ் சாகரத்து ளழுந்தி
மனம் புண்ணேயாகிப்
பற்பலநாட் செலவொருநாள் அமைய மறிந்துளந்
துணிந்து பண்பிற் போற்றிச்
சொற்பெறு நற்புகழ்க் கணவன் முகநோக்கி
யெண்ணியவை சொல்லலுற்றாள்.

(ஈ) தரித்திரம் மிக்க வனப்பினை யொடுக்கிச் சரீரத்தை
யுலர்தரவாட்டுந்
தரித்திர மளவாச் சோம்பலையெழுப்புஞ் சாற்றரு
முலோபத்தை மிகுக்கு
தரித்திரந் தலைவன் தலைவிர்க்கிடையே தடுப்பருங்
கலாம் பல விளைக்கும்
தரித்திர மவமானம்பொய் பேராசை தருமிதிற்
கொடிய தொன்றிலையே.

[உ] யாதவர் குலத்திற்றோன்றி யவரசர் யாவர்க்கு
மதிபனுமிணையில்
மாதவனுடன் பல கலைக்கடலை வாய்மடுத்[illegible]
[illegible]
ராதலினப் பீதாம்பரன் மருங்கி லணைந்[illegible]
பெருஞ் செல்வந்
தீதறக்கொண்டு கொடுத்துநஞ் சிறுவர் செல்லல்
நோய் தவிர்க்குதல் வேண்டும்.

மாதவன்—கண்ணன், பீதாம்பரன் - பொன்னுடை அணிந் வன்.

[i] குசேலரின் மனைவி கற்பிற் சிறந்தவள் என்பது எவ்வாறு புலப்படுத்தப்பட்டுள்ளது?

[ii] வறுமையினால் வருந் தீமைகள் யாவை?

[iii] பெரு நிலத்திற்கிடந் தழும், பற்பல நாட்செலவொருநாள், மடித்தலத் திருத்தி, மும் மகவுங்கைந் நீட்டும் என்ற சொற்றொடர்களைப் பிரித்தெழுதுக.

[iv] வேற்றுமைத் தொகை, வினையெச்சம், பெயரெச்சம், உரிச் சொல் எனபவற்றுக்கு இச்செய்யுள்களிலிருந்து உதாரணம் தருக.

[v] சகிப்பாள், மிடி, சாமரம், வனப்பு, அதிபன் இச்சொற்கள் ஒவ்வொன்றினதும் பொருள்களைக் குறிக்கும் வேறு சொற்கள் ஒவ்வொன்று தருக.

4. பின்வருவனவற்றின் பொருள் விளங்க அவற்றை வாக்கியங்களிலமைத் தெழுதுக.

நரைதிரை, தூற்றுதல், ஆசீர்வாதம், வாக்குறுதி, முன்னேற்றம், சஞ்சலம், சமுதாயம், அரங்கு, வேடிக்கை, சாதகம்.

5. பின்வருவனவற்றின் குறிப்புப்பொருள் நன்கு புலப்படுமாறு அவற்றைத் தனித்தனி வாக்கியங்களிலமைத் தெழுதுக.

[illegible], தோள்கொடுத்தல், கைகூடு[illegible], நடைப்பிணம்.

(விடைகள் 7-ம் பக்கம்)

# 'கல்வியின்நோக்கம்உத்தியோகம் பெறுவதாக இருக்கக்கூடாது'

## பரிசளிப்பு விழாவில் வடமாநில வித்தியாதிபதி

யாழ்ப்பாணம், வெள்ளி

"உண்மையான கல்வியின் நோக்கம் உத்தியோகம் பெறுவதாகமட்டும் இருக்கக்கூடாது. இன்று பெரும்பாலான பெற்றோர்கள் கூடத் தங்களது பிள்ளைகள் என்ஜினியர்களாகவோ, டாக்டர்களாகவோதேர்ந்து பெருமளவில் உழைக்க வேண்டுமென்று கருதுகிறார்கள். மாணவர்களில் பெரும்பான்மையினர்கூட இத்தகைய மனப்பான்மையுடனேயே ஒழுகுகிறார். இதன் விளைவுகளைப்பற்றி நாம் எல்லோரும் ஒருகணம் சிந்தித்துப்பார்க்க வேண்டும். நம்மொழியின் பெரும் புலவரான திருவள்ளுவரின், "கற்றுங் கொழுதுக!..." என்ற வாக்கும் இங்கு கவனிக்கப்படாமல் இருப்பதைக்காண்கிறோம். கல்வியைப்போதிக்கின்ற ஆசிரியர்களும், கல்வி போதனையைப்பெறுகின்ற சிறுவர்களின் பெற்றோர்களும் இவ்விஷயத்தில் போதிய அக்கறை எடுக்கவேண்டும். கல்வி கற்பதன் நோக்கம் பெரிய பதவியை எதிர்நோக்குவதாகவும், பொருள் தேடுவதாகவும் இருக்கக்கூடாதென்று இதன் மூலம் நான் முற்றாக மறுக்கமுடியாது, அது ஒருபகுதி நோக்கமாக இருக்கலாம். வாழ்க்கைக்குப் பொருள் தேடுவது அவசியமற்றது என்பதை எவரும் மறுக்கொணார். இருப்பினும் அதுவே பூரண நோக்கமாக இருக்கலாகாது. இது பிள்ளைகளுக்கு நன்றாக விளங்கவேண்டும்."

யாழ்ப்பாணம் கனகரத்தினம் [ஸ்ரான்லி] மத்திய மகாவித்தியாலய பரிசளிப்பு விழாவில் வடமாநில வித்தியாதிபதி திருமதி ஆர். ஆர். நவரத்தினம் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரைநிகழ்த்துகையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

### கல்விபோதிப்பது இலகுவானதல்ல

கல்விபோதிப்பது என்பது ஓர் இலகுவான காரியமுமன்று. எந்தப் பெரிய கல்விமானுக்கோ அன்றிப்பெரும் பட்டதாரிக்கோ என்றும் அது ஒரு பாரிய பிரச்னைதான். நான் எனது சொந்த அனுபவம் வாயிலாக இதை நன்றாக உணர்ந்திருக்கிறேன். என் குழந்தைகளைப் பரீட்சைகளிற் சித்தியடைவதில் எங்ஙனம் வல்லவர்களாக்கலாம் என்பதை ஆராய நான் எனது முழு வாழ்க்கையையுமே அர்ப்பணித்திருந்த போதிலும், அதில்இன்னும்நான்போதிய தேர்ச்சி பெற்றேனில்லை என்பதை ஒப்புக்கொள்ளத்தான்வேண்டும்;

குழந்தைகள் உளவியல் ரீதியாகவோ வேறுவகையிலோ பகுக்கப்பட்டு அதற்கியையப்போதிக்கவேண்டும். போதனையின் முக்கிய பாகம் அடக்கத்தை வலியுறுத்தவேண்டும். அடக்கம் இல்லாதவரையில் எந்தக் கல்வியும் எவரையும் பூரண சிறந்த பண்பாளனாக ஆக்கிவிடமுடியாது. அடக்கம் தான் முதல் அவசியம்.

அதைக் குழந்தைகளிடையே புகட்டிக் கல்வியை ஒவ்வொரு குழந்தைக்கும் தனித்தனிக் கவனிப்புடன் ஊட்டினாலேயே உண்மையான கல்வியின்நோக்கம் நிறைவுறும்.

## மாணவிகள் களைபிடுங்கினர்

பண்டத்தரிப்பு, வியா.

பாடசாலையில் விவசாயமும் ஒரு பாடமாக்கப்பட்டதைத் தொடர்ந்து பாடசாலைகள் பலவற்றிலும் களை பிடுங்குதல் நடைபெற்று வருகிறது.

இளவாலை திருக்குடும்ப கன்னியர் பாடசாலையைச் சேர்ந்த மாணவிகளும் ஆசிரியர்களும் சித்திரமேழி வயல்களில் களை பிடுங்கினர். 6-ம் 7-ம் வகுப்புமாணவிகள் இதில் கலந்து கொண்டனர்.

ஃ ஃ ஃ

இமையாணன், வியா

உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மாணவிகளில் சிலர் உடுப்பிட்டியில் உள்ள "விருச்சி" வயல்களில் களை பிடுங்கினர். செல்வி முத்து உட்பட வேறுசில ஆசிரியைகளின் தலைமையில்இது நடைபெற்றது.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி மாணவர்களில் சிலரும், உடுப்பிட்டி "விருச்சி" குளத்திற்கு அருகாமையில் உள்ள வயல்களில் களைபிடுங்கினர்.

ஃ ஃ ஃ

அராலி, வியாழன்

அராலிதென்மேற்கு முருகமூர்த்தி வித்தியாசாலை மாணவ மாணவிகள் இரு பிரிவுகளாகப் பிரிந்து ஒரு பிரிவு அப்பாடசாலை தலைமை ஆசிரியரோடும், மற்றப் பிரிவினர் உதவி ஆசிரியரோடும் சென்று சென்ற ஐந்து நாட்களாக 10 வயல்களில் களைபிடுங்கினர்.

## கி. மு. சங்கத்துக்கு புதிய கட்டடம்

நெடுந்தீவு. வியா.

கடந்த புயலால் கடும் சேதத்துக்குள்ளான நெடுந்தீவு கிழக்கு கிராமமுன்னேற்றச்சங்கக் கட்டடம் திருத்தியமைக்க முடியாத நிலையிலுள்ளதால் புதிய ஒரு கட்டடம் கட்டப்படவிருக்கிறது.

## மரத்திலிருந்து விழுந்துமரணம்

யாழ்ப்பாணம், வெள்ளி

மரத்திலிருந்து தவறி வீழ்ந்ததால் நான்கு பிள்ளைகளின் தந்தையொருவர் ஸ்தலத்திலேயே மரணமானார். இப்பரிதாபசம்பவம் நல்லூர் கொண்டலடி வைரவர் கோவிலுக்கருகாமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

மரணமான சின்னையா கார்த்தி[55 வயது] சம்பவம் நடந்தபோது தென்னைமரமொன்றில் கள்ளுசீவுவதற்காக ஏறியதாகவும, மரத்திலிருந்து தவறி விழுந்து ஸ்தலத்திலேயே துடிதுடித்து மரணமானதாகவும் மரணவிசாரணை அதிகாரிதிரு. நா. இராசநாயகம் நடத்திய மரணவிசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

மரத்திலிருந்து விழ்ந்ததால் ஏற்பட்ட விபத்துமரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. [ந. நி]

## பலாலிவிமான நிலையசிரமைப்பு

அளவெட்டி, வியாழன்

பலாலி விமான நிலையத்தில் சிரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தற்சமயம் 68,000 ரூபாய் செலவில் விமான நிலையத்தைச் சுற்றிமுள்ளுக்கம்பிவேலி அமைக்கும் வேலைகள் ஆரம்பமாக இருக்கின்றன.

## 'லொட லொட' பஸ்

வேலணை, வியாழன்

பலமுறை இ. போ. ச. அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டுவந்தும் 'லொட லொட' பஸ்கள் தீவுப் பகுதியில் சேவைக்கு விடப்பட்டிருப்பதாக நமது நிருபரிடம் இப்பகுதி பிரயாணிகள் கவலை தெரிவித்துக் கொண்டனர்.

## குடை யாருடையது?

யாழ்ப்பாணம், வெள்ளி

இணுவில் பஸ் நிலையமொன்றில் கண்டெடுக்கப்பட்ட குடையொன்று திரு. ம. அரிக்ர ஐயரினால் 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் பெற்றுக்கொள்ளலாம்.

## வெளிநாட்டு . . .

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

அடிப்படையிலானதெனவும், இந்தியாவுடன் கைத்தொழில், மற்றும் துறைகளில் அதன் உறவுகள் நெருக்கமாகவிருக்குமெனவும் கெயிரோ வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.

## கைதிகளுக்கு விடுதலை

ஈமனில், புதிய ஆட்சிபதவிக்கு வந்ததையடுத்து, அரசியற் கைதிகள் பலருக்கு விடுதலையளிக்கப்பட்டது.

முன்னைய ஆட்சியில் அதிருப்தியடைந்திருந்த பல இனத்தலைவர்கள் இப்போது சமரசப் பேச்சுவார்த்தைகள் நடத்த முன்வந்துள்ளனராம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதைபந்தாட்டம்:

# ஒரு கோலால் மகாஜனு கொக்குவில் இந்துவை வென்றது

## விறுவிறுப்பான உதைபந்தாட்ட மோதல்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் பாடசாலை விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் கல்லூரிகளுக்கிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நேற்று முன்தினம் மகாஜனக் கல்லூரிக்கும் கொக்குவில் இந்துக கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற 2-ம் பிரிவு மோதலில் மகாஜனக் கோஷ்டி ஒரு கோலைப் போட்டு வெற்றியீட்டியது

ஆரம்பத்திலிருந்து முடிவு வரையும் அருமையாக இருந்த மோதலில் உணர்ச்சி வேகம் கொண்ட ரசிகர்கள் அதிர் வெடிகளை வெடித்து வீரர்களை உற்சாகப்படுத்தி கொண்டிருந்தனர். இடைவேளைக்கு முன்னர் மகாஜனு ஒரு கோல் போட்டது. இடைவேளைக்கு பின்னர் கொக்குவில் தம்மால் இயன்ற மட்டும் கடுமையாக மோதியதால் ஒருவருமே கோல்கள் போடவில்லை. இப் போட்டி முடிவில் தெல்லிப்பழை மகாஜனக் கோஷ்டி 1—0 கோலால் கொக்குவில் இந்துக் கோஷ்டியை வென்றது இப் போட்டியில் வெற்றியீட்டிய மகாஜனக் கல்லூரி மாணவர்கள் யாழ். நகரில் ஒரு சைக்கிள் ஊர்வலம் ஒன்றை நடத்தினர்கள்.

### மீண்டும் வெற்றி தோல்வியில்லை

இப் போட்டியை அடுத்து முன்னர் நடந்த போட்டியில் வெற்றி தோல்வி காணுது ஆட்டத்தை முடித்த உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியும், காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியும் மீண்டும் மோதின. இப்போட்டியிலும் இரு கோஷ்டியினரும் சமபலமுடன் மோதி வெற்றி தோல்வியின்றியே ஆட்டத்தை முடித்தனர்.

இடைவேளைக்கு முன்னர் நடைபெற்ற போட்டியில் உடுப்பிட்டிக் கோஷ்டியே ஒரு கோல் போட்டது. காங்கேசன்துறை அருமையாக இக் கட்டங்களில் ஆடிய போழுதிலும் சில கோலடிக்கும் சந்தர்ப்பங்களைத் தவறவிட்டுவிட்டது. இடைவேளைக்குப் பின்னர் காங்கேசன்துறைக் கோஷ்டி ஒரு புது உற்சாகத்துடன் மோதி ஒரு அருமையான 'கோலை' மின்னல் வேகத்தில் போட்டது. இக் கோலுக்கு ரசிகர்களின் பலத்த 'அப்பிளாஸ்' கிடைத்தது. இப் போட்டி முடிவில் இரு கோஷ்டியினரும் தா 1—1 கோல்கள் போட்டமையால் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

(வி. நி)

# வைத்தீஸ்வராக் கோஷ்டி வெற்றி

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் பாடசாலை விளையாட்டுச்சங்கத்தின் ஆதரவில் யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்ற கனகரெத்னம் மத்திய மகாவித்தியாலயத்துக்கும் வண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற ஒரு உதைபந்தாட்ட மோதலில் வைத்தீஸ்வராக் கோஷ்டி 2—0 கோல்களால் கனகரெத்தினம் கோஷ்டியை வென்றது.

வைத்தீஸ்வரா வீரர்கள் நன்றாக ஆடி எதிர்கோஷ்டியைத் திணறடித்து இரு கோல்களையும் அடுத்தடுத்து விளாசினர். கனகரெத்தினம் கோஷ்டியினர் தமக்குக் கிடைத்த கோலடிக்கும் சந்தர்ப்பங்களைத் தவறவிட்டுக் கொண்டேயிருந்தனர்.

[வி. நி.]

## உரும்பராய் இந்துவென்றது

புன்னாலைக்கட்டுவன், வியா.

உரும்பராய் இந்துக் கல்லூரி இரண்டாம் பிரிவுக் கோஷ்டிக்கும், கனகரத்தினம் மகாவித்தியாலயஇரண்டாம் பிரிவுக்கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் உரும்பராய் 6-0 கோல்களால் வென்றது. பி. இந்திரமோகன், எம். நித்தியானந்தன் வெற்றிபெற்ற கோஷ்டியில் திறமையாக விளையாடினர். திரு. எஸ். இரத்தினம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

இரு கல்லூரிகளினதும் 3-ம் பிரிவுக்கோஷ்டியினரின் போட்டியில், கனகரத்தினம் மகாவித்தியாலயம் 3-0 கோல்களால் வென்றது. திரு. வி. டி. கணேசலிங்கம் மத்தியஸ்தம் வகித்தார்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வெள்ளி 10-11-67

[செய்திகள்:-காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00].

344 மீற்றர் & 61 மீற்றர் காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 முஸ்லிம் நற்சிந்தனை, 6-45 பக்திப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-30 துதிப்பாடல்கள், 8-00 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

344 மீற்றர் & 61 மீற்றர் மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 வளரும் பயிர்.

இரவு 6-15 பஜனை 6-45, கிராமசஞ்சிகை, 7-15 பாவளம், 7-30. விவேகச்சக்கரம் 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 செய்திச்சுருள், 9-45 நாதசுரம்.

## யாழ்ப்பாண கல்லூரியை மத்தியகல்லூரி வென்றது

யாழ்ப்பாணம், வெள்ளி

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரிக்கும், யாழ். மத்தியகல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான 1-ம், 2-ம் பிரிவுகளுக்கிடையேயான உதைபந்தாட்டப் போட்டிகளில் 2-ம் பிரிவுப் போட்டியில் யாழ். மத்தியகல்லூரி வெற்றியீட்டியது. ஆட்டத்தின் இடையில் மழை பெய்ததால் 1-ம் பிரிவுப்போட்டி இடையில் வெற்றிதோல்வியில்லாமல் கைவிடப்பட்டது.

முதலில் நடைபெற்ற 2-ம் பிரிவு ஆட்டம் ஆரம்பத்தில் இருந்து முடிவுவரையும் நன்றாகவே இருந்தது. இடைவேளைக்கு முன்னர் யாழ். மத்திய கல்லூரி வீரர்கள் அடுத்தடுத்து இரு கோல்களைப் போட்டனர். வட்டுக்கோட்டைவீரர்களின் கோலடிக்கும் முயற்சிகள் மத்திய கல்லூரியின் பின்னணி வீரர்களால் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டுக்கொண்டேயிருந்தது. இடைவேளைக்குப் பின்னர் நடைபெற்ற போட்டி மிகவும் விறுவிறுப்பாக இருந்தது.

மத்தியகல்லூரிவீரர்களின் 'பாசிங்' ஆட்டம் எதிர்க்கோஷ்டி வீரர்களைப் படாதபாடுபடுத்தியது. மத்தியகல்லூரி மேலும் இரு கோல்களை அழகாகப்போட்டது. எனினும் வட்டுக்கோட்டை முன்னணி வீரர்களின் சில கோலடிக்கும் முயற்சிகள் பாராட்டக்கூடியன. இப்போட்டி முடிவில் மத்தியகல்லூரி 4—0 கோல்களால் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியை வெற்றியீட்டியது.

இப்போட்டிகள் யாழ். மத்தியகல்லூரி மைதானத்தில் நடைபெற்றன (வி. நி.)

## றெக்கட் வெற்றி

உடுவில், வியாழன்

சுதுமலை றெக்கட் விளையாட்டுக்கோஷ்டிக்கும் பிரம்படி றெபேட் கோஷ்டிக்குமிடையில் நேற்று கொக்குவிலில் நடைபெற்ற உதைபந்தாட்டப்போட்டியொன்றில் சுதுமலை றெக்கெட் கோஷ்டி 3—1 கோல்களால் றெபேட் கோஷ்டியைதோற்கடித்தது.

போட்டிக்கு திரு. கே. பி. கமலநாதன் மத்தியஸ்தம் வகித்தார்.

## "விளையாட்டிலும் ஆர்வம் காட்ட வேண்டும்"

உடுவில், வியாழன்

"விவசாயத்தில் இளைஞர்கள் இப்போது காட்டும் ஆர்வம்போல் விளையாட்டிலும் காட்டவேண்டும். இளைஞர்கள் விவசாயத்தில் ஈடுபடுவதுடன் விளையாட்டிலும் ஊக்கம் காட்டுவது அவசியம்"

இணுவிலில் இளைஞர் விளையாட்டுக் கழகம் ஒன்றை அங்குரார்ப்பணம் செய்து வைத்துப் பேசிய உடுவில் கிராமசபைத் தலைவர் திரு சி. முத்துலிங்கம் மேற்கண்டவாறு கூறினர்.

திரு. எஸ். சுந்தரலிங்கம் நன்றிகூறினர்.

## பசுவதை எதிர்ப்பு மீண்டும் ஆரம்பம்

புதுடில்லி, நவ. 9

பசுவதை எதிர்ப்பு இயக்கம் மீண்டும் விரைவில் ஆரம்பிக்கப்படலாம் என்று [illegible] யார் அறிவித்துள்ளனர்.

# தமிழ் மொழி

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

### விடைகள்

3. [I] கற்பிலே சிறந்து விளங்கும் அருந்ததி முதலான பெண்கள் புகழும்படியான கற்பிற் சிறந்தவள் என்று குசேலரின் மனைவியின் கற்பின் மகிமை புலப்படுத்தப்பட்டுள்ளது.

(II) வறுமையின் தீமைகளாவன:-
வறுமை அழகைக் கெடுத்து உடலை வாட்டும். சோம்பலை உண்டாக்கும். உலோப குணத்தைக் கொடுக்கும் கணவன் மனைவியர்க்கிடையே கலகத்தை விளைவிக்கும். அவமானம், பொய், பேராசை முதலிய கெட்ட குணங்களை உண்டாக்கும்.

(III) சொற்றொடர்களைப் பிரித்தெழுதுதல்:-
பெருநிலத்திற்கிடந்தழும் =
பெருமை + நிலத்தில் + கிடந்து + அழும்.
பற்பலநாட் செலவொருநாள் =
பல + பல + நாள் + செல + ஒன்று + நாள்.
மடித்தலத்திருத்தி = மடி + தலத்து + இருத்தி.
மும்மகவுங்கைந்நீட்டும் =
மூன்று + மகவு + உம் + கை + நீட்டும்.

[IV] வேற்றுமைத்தொகை —
சிறுவர் செல்லல் நோய் [சிறுவரது செல்லல்நோய்]
வினையெச்சம் — நோக்கி
பெயரெச்சம் — தோன்றிய
உரிச்சொல் — நனி

[V] ஒத்த கருத்துள்ள சொற்கள்:-
சகிப்பாள் — பொறுப்பாள்
மிடி — வறுமை
சாகரம் — கடல்
வனப்பு — அழகு
அதிபன் — தலைவன்

4. சொற்களின்பொருள்விளங்க் வாக்கியங்களிலமைத்தல்

[I] நரைதிரை:- நரைதிரை வருமென்று அஞ்சி இளமையிடத்தே துறவினை மேற்கொள்வர் அறிஞர்.

[II] தூற்றுதல்:- ஒருவரில்லாத நேரத்தில் அவரைப் பற்றித் தூற்றுதல் இழிந்தோர் செயல்.

[III] ஆசீர்வாதம்:- சகுந்தலை, கண்ணுவ முனிவரின் ஆசீர்வாதம் பெற்று, தனது கணவனிடஞ் சென்ருள்.

[IV] வாக்குறுதி:- தசரதன் தான் முன்னர் கூறிய வாக்குறுதியைக் காப்பாற்ற விரும்பி, கைகேயி கேட்ட இரு வரங்களையுங் கொடுத்தான்.

[V] முன்னேற்றம்:- நாட்டின் பொருளாதார முன்னேற்றங்கருதி உழைப்பதே தமது அரசாங்கத் தலையாய கடமை என்று இந்தியப் பிரதமர் அறிவித்தார்.

[VI] சஞ்சலம்:- நளன் சூதாடி நாடுநகரிழந்து தமயந்தியுடன் காட்டுக்குச்சென்றபோது நிடத நாட்டு மக்கள் சஞ்சலமடைந்தனர்.

[VII] சமுதாயம்:- இன்றைய மக்கட் சமுதாயம் கொள்கை வேறுபாட்டினுல் ஒற்றுமை குன்றிப் பிளவுபட்டுக்கிடக்கின்றது.

(VIII) அரங்கு:- நாடக அரங்கிலே மாதவியின் நடனக் கலையின் திறனைக்கண்ட கோவலன் அவள் மீது காதல்கொண்டான்.

[IX] வேடிக்கை.- நாற்சந்தியின் நடுவே இருவர் சண்டையிடும்பொழுது பக்கத்தில் நின்றோர் வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்றனர்.

(X) சாதகம்:- காலநிலை சாதகமாக இருந்தபடியால் படை வீரர் முன்னேறிச் சென்று பகைவரை வென்றனர்.

5. குறிப்புப் பொருள்புலப்பட வாக்கியங்களிலமைத்தல்:

(i) விழலுக்கிறைத்தல்:- இராவணனுக்கு அவன் தம்பிமார் உரைத்த புத்திமதிகள் விழலுக்கிறைத்த நீராயின.

(ii) தோள்கொடுத்தல்:- ஒருவருக்கு இடையூறு நேரிட்ட காலத்துத் தோள்கொடுத்துதவுதல் உத்தம நண்பர்களினியல்பு

(iii) கைகூடுதல்:- தான் நினைத்த காரியம் கைகூடுதல் வேண்டி, கூனி இல்லாததும் பொல்லாததும் கூறிக் கைகேயியின் மனத்தைத் திருப்பினுள்.

(iv) செவிமடுத்தல்:- வசிட்ட முனிவர் கூறிய உபதேச மொழிகளை இராமபிரான் செவிமடுத்துக் கேட்டான்.

(v) நடைப்பிணம்:- நடுக்காட்டிலே நளமகாராசனை இழந்த தமயந்தி நடைப்பிணம் போலானுள்

(அடுத்த மாதிரி வினு விடைகள் 17-11-67-இல் வெளியாகும்.)

# தமிழ் மொழிச்சட்டம் அமுல்படுத்தப்படும்

கொழும்பு, வியாழன்

தமிழ்மொழி விசேட சட்ட விதிகளை சரிவர அமுல்நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் தமிழரசுக்கட்சியின் ஆலோசனையைப் பெற்றே வடக்குக் கிழக்கு மாகாணங்களில் விவசாயப்படைதிரட்டப்படுமென்றும் பிரதமர் டட்லி சேனநாயக்கா நேற்றிரவு தம்மைச் சந்தித்த தமிழரசுக்கட்சித் தலைவர்களிடம் உறுதியளித்தார் எனத் தெரிகிறது.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு பன்னிரண்டு மணிவரை பிரதமருடன் தமிழரசுத் தலைவர்கள் பிரதமரின் வூட்லண்ட்ஸ் இல்லத்தில் சந்தித்துப் பேசினர்கள். தமிழ் பேசும் மக்களைச்சூழ்ந்துள்ள முக்கிய பிரச்னைகளையெல்லாம் தமிழரசுத் தலைவர்கள் — பிரதமர் முன்னிலை

[8-ம் பக்கம் பார்க்க.]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1லட்சத்துக்கு அதிகமான வாக்குகளால் மாறன் வெற்றி

## தென் சென்னை இடைத் தேர்தல் முடிவு

சென்னை, நவ. 9

தென்சென்னையில் நேற்று நடைபெற்ற லோகசபைக்கான உபதேர்தலில் தி. மு. க. அபேட்சகரான முரசொலிமாறன் ஒரு லட்சத்துக்கும் அதிகமான வாக்குகளால் வெற்றி பெற்றார். இவருடன் ஒரு காங்கிரஸ் அபேட்சகரும் 5 சுயேச்சை அபேட்சகர்களும் போட்டியிட்டனர்.

காங்கிரஸ் அபேட்சகரான திரு. சி. ஆர். ராமசாமி 1,35,596 வாக்குகள் பெற்றார் மற்ற ஐந்து சுயேச்சை அபேட்சகர்களும் கட்டுப்பணத்தை இழந்தனர்.

திரு. எஸ். என். மாறனுக்கு 2,41,304 வாக்குகள் கிடைத்தன.

### அண்ணாவின் தொகுதி

தமிழக முதலமைச்சர் திரு. அண்ணாதுரை, இத்தொகுதி அங்கத்தவர் பதவியை ராஜினமா செய்ததைத் தொடர்ந்தே இந்த இடைத்தேர்தல் நடைபெற்றது. நேற்று முன்தினம் நடைபெற்ற இத்தேர்தலின் வாக்குகள் நேற்று எண்ணப்பட்டன. சென்னை நேரு ஸ்டேடியத்திலும், பச்சையப்பன் கல்லூரியிலும் வாக்குச் சீட்டுகள் 6 அதிகாரிகள் முன்னிலையில் எண்ணப்பட்டன.

இத்தொகுதியில் உள்ள 5,83,721 வாக்காளர்கள் லோகசபைக்குத் தமது பிரதிநிதியைத் தேர்ந்தெடுப்பதற்கு இத்தேர்தல் நடைபெற்றது. இத்தேர்தலில் வெற்றியீட்டிய 'முரசொலி' மாறன் தமிழ்நாடு போக்குவரத்து அமைச்சர் திரு மு. கருணாநிதியின் மருமகனாவார் என்பது குறிப்பிடத்தக்கது.

---

அராலி வெளியில்

## கை, கால் துண்டிக்கப்பட்ட நிலையில் ஆணின் சடலம்

யாழ்ப்பாணம், வியா.

கையும் காலும் துண்டிக்கப்பட்ட ஒரு ஆணின் சடலம், அராலிச் சந்தியிலுள்ள வெளியில் ஊர்காவற்றுறை பொலிஸாரால் நேற்றிரவு கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

சுமார் 5 அடி 2 அங்குலம் உயரமுள்ள இந்தச் சடலம் வெள்ளைச் சாரமும் அரைக்கை பெனியனும் அணிந்த நிலையில் இங்கு காணப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கறுப்பு நிறமும் நல்ல உடற் கட்டுமுள்ள இச்சடலத்தின் அருகில் நச்சுத் திராவகப் போத்தல் ஒன்றும் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இவர் ஒரு மீனவராக இருக்கலாமெனப் பொலிசார் சந்தேகிக்கின்றனர். இச்சடலம் சம்பந்தமான பூரண விபரம் அறிய விரும்புபவர்கள் ஊர்காவற்றுறை பொலிஸாருடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் கொலைசெய்யப்பட்டிருக்கலாமெனச் சந்தேகிக்கப்படுகிறது. பொலிஸார் தீவிர புலன்விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். ]ந நி[

---

## அமெரிக்க தூதருக்கு யாழ். விசேஷ ஆணையாளர் கடிதம்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணத்துக்கு சமீபத்தில் இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதர் திரு. அன்ட்றூவி கொறி விஜயம் மேற்கொண்டிருந்தபோது நிகழ்ந்த எதிர்பாராத அசம்பாவித சம்பவத்தை யிட்டு அதனைப் பொருட்படுத்தாது மன்னிக்குமாறு யாழ்ப்பாண மாநகரசபை விசேஷ ஆணையாளர் திரு. என். நடேசன் அவருக்கனுப்பிவைத்துள்ள கடிதமொன்றில் கேட்டுள்ளார்.

இச்சம்பவம் கட்டுப்பாடு அற்ற சில விஷமிகளாலேயே ஏற்பட்டதாகவும் இக்கடிதத்தில் திரு. நடேசன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இங்கு அமெரிக்க கலாசார நூல்நிலையத்தைத் திறந்துவைக்க அமெரிக்க தூதர் திரு. அன்ட்றூவி கொறி வந்திருந்தபோது இவரது காருக்கு கல், கூழ் முட்டை ஆகியன வீசப்பட்டது தெரிந்ததே. (ந. நி)

---

### திருமலையில் கொண்டாட்டம்

திருமலை, வியா.

திருகோணமலைத் துறைமுகம் தேசியமயமாக்கப்பட்டதற்கு வரவேற்பும் மகிழ்ச்சியும் தெரிவிக்கு முகமாக துறைமுகத்தைச் சேர்ந்த இலங்கை வர்த்தக சிப்பந்திகள் சங்க ஊழியர் இன்று விழாக் கொண்டாடினர்.

---

### பர்மா திரும்பினார்

கொழும்பு, புதன்

இலங்கையிலிருந்த பர்மீயத் தூதர் திரு. பூன்வார்ட்டின் மனைவியான திருமதி ஷேரீலியின் மரணம் சம்பந்தமாக இங்கு விசாரணை நடத்த பர்மாவிலிருந்து வந்திருந்த பொலிஸ் சுப்ரிண்டன் திரு. அங் சுமார் இருவாரங்கள் வரை விசாரணை நடத்திய பின்னர் இன்று பர்மாவுக்குப் பயணமானார். இவர் பாண்ட் வாத்திய கோஷ்டியின் தலைவரான திரு. றெக்ஸ் டி சில்வாவையும் விசாரணை செய்திருந்தார்.

---

### எம்.பி. யிடம் முறையீடு

மல்லாவி, வியா.

'வவுனிக்குளம் குடியேற்றத் திட்டத்திலுள்ள சிவபுரம் என்ற பகுதி 1959-ம் ஆண்டு குடியேற்றப்பட்டது. இப்பகுதிக்கு இன்று வரை தபால் சேவை செய்யப்படவில்லை. தபால்சேவை மாத்திரமன்றித் தந்திகூட விநியோகிக்கப் படுவதில்லை. அன்றியும் மழை காலத்தில் வவுனிக்குளத்தில் ஏற்படும் வெள்ளப்பெருக்கினால்தடைப்பட்டுபோக்குவரத்தின்றிக் கஷ்டப்படுவதுமுண்டு. இப்பகுதியின் மூன்று கரைகளில் ஆறு பாய்கிறது. மற்றப் பகுதியில் குளமும்உண்டு. ஆதலினால் வவுனிக்குளத்தையும் சிவபுரத்தையும் ஓர்பாலம் நிறுவித்தரவேண்டும்'' என்று இப்பகுதிக்கு விஜயம் செய்த மன்னார் எம்.பி. திரு வி.ஏ. அழகக்கோனிடம் இப்பகுதிமக்கள் முறையிட்டுள்ளனர். இவ்விடயத்தை மன்னார் அரசாங்க அதிபர் திரு. எஸ். நேசையாவின் கவனத்துக்கு மன்னார் எம். பி. கொண்டு வந்துள்ளார்.

---

### இடமாற்றங்கள்

மட்டக்களப்பு, வியா.

மட்டக்களப்பு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. பீ. ஏ. ஜே. காசிநாதர் உபகாரச்சம்பளம் பெற்று இந்தியா சென்றிருப்பதால் அவர் இந்தியாவிலிருக்கும் காலமாகிய நவம்பர் மாதம் முழுமைக்கும் மன்னார் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. தேவரத்தினம் டான்போத் மட்டக்களப்பு உள்ளூராட்சி உதவி ஆணையாளராகக் கடமையாற்றுவார். வவனியா உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. க. நல்லைநாதன் தமது வழமையான கடமைகளுடன் மன்னார் உள்ளூராட்சி உதவி ஆணையாளராக கடமையாற்றிவருவார்.

---

### "அராலி கிராம சபையாகும்"

அராலி, வியாழன்

அராலிக் கிராமத்தை 12 வட்டாரங்களாகப் பிரித்து ஓர் கிராமசபை விரைவில் நிறுவப்படுமென உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. மாணிக்கவாசகர் யாழ். கச்சேரியில் அண்மையில் நடைபெற்ற கூட்டமொன்றில் அராலிப் பிரதிநிதிகளுக்கு கூறியுள்ளார். வட்டாரங்களின் எல்லைகள் வரையறுக்க அரசாங்க அளவைப் பகுதி உத்தியோகத்தருக்கு ஆலோசனை கூற, அராலிவாசிகள் திருவாளர்கள்: இ. நாகலிங்கம், க. நடராசா, கு. தில்லையம்பலம் ஆகியோருக்கு உதவி ஆணையாளர் நியமனக் கடிதங்கள் அனுப்பியுள்ளார். இம்மூவரும் இக் கிராமத்திலுள்ள மூன்றுமுக்கிய சமூகங்களின் பிரதிநிதிகள். வட்டாரங்கள் விரைவில் அளக்கப்படுமெனவும் தெரியவருகிறது.

---

### சுன்னகம் பட்டிசபை தீர்மானம்

உடுவில், வியா.

உடுவிலில் இலவச பிரசவ விடுதியொன்றை ஸ்தாபிப்பதற்காக சுமார் ஒன்றரை லட்சரூபாவை சுகாதார அமைச்சிடமிருந்து கடன் கோருவதென சுன்னகம் பட்டினசபை தீர்மானித்துள்ளது. கூட்டத்துக்கு பட்டினசபைத் தலைவர் திரு. பி. நாகலிங்கம் தலைமை வகித்தார்.

---

## தனிநாடு அமைப்பினும் ...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

காரணம் கிழக்கு மாகாணத்தில் தமிழ் காங்கிரஸ் எம்பிக்கள் எவரும் இல்லை. திருக்கோணமலை எம். பி. தமிழரசுக்கட்சியைச் சேர்ந்தவர். துறைமுகத்தில் முதலாளிகளும், தொழிலாளிகளில் ஒரு பகுதியினரும் தமிழரசுக்கட்சியைச் சேர்ந்தவர்கள். தேசியமயமாக்குவதென முடிவுசெய்யும் மந்திரிசபையில் இருப்பவரும் தமிரசுக்கட்சியைச் சேர்ந்தவர்கள். தேசிய அரசாங்கத்தில் இரண்டாவது பெரிய கட்சியாக விளங்குவது தமிழரசுக்கட்சிதான். இந்த நிலையில் அதில் நாங்கள் தலையிட விரும்பவில்லை. தமிழரசுக்கட்சிதான் முழுப்பொறுப்பும் ஏற்கவேண்டும். தமிழருககு ஏற்படும் தொல்லைகளுக்குத் தமிழரசாரே பொறுப்பு.

### ஒத்துழைப்பு கொடுத்தோம்

தேசியஅரசாங்கம் அமைக்கப்பட்டு கடந்தஇரண்டரை ஆண்டுகளாக சமஷ்டி கட்சியினருக்கு பாராளுமன்றத்தில்ஒத்துழைப்புக்கொடுத்து வந்தோம். தமிழ்மொழி மசோதா பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டபோது அதுபயனளிக்காது என்று தெரிந்தும், அதற்கு வாக்களித்தோம். இலங்கை-இந்திய ஒப்பந்த அமுல் மசோதவை பாராளுமன்றத்தில் தமிழரசுக் கட்சியினர் முழுக்கமுழுக்க ஆதரித்தபோது, நாம் அதையும் ஆதரித்தோம். போதனமொழி, தீண்டாமைஒழிப்பு இன்னும் பல பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு தமிழரசுக்கட்சியினருக்கு ஒத்துழைப்புக் கொடுத்தோம். கடந்த இரண்டரைவருடகாலத்தில் சமஷ்டிக் கட்சியினர் எந்த உரிமையாவது பெற்றுத்தந்தார்களா? மாவட்டசபை கூடக்கிடைக்கும் என்பது நிச்சயமில்லை.

### உரிமைபெற்று தருவோம்

இன்றுமுதல் தமிழரசுக் எம். பி.க்கள் அத்தனை பேரும் உரிமைகளைப்பெற தங்களால் முடியாதென பகிரங்கமாகக் கூறட்டும். பாராளுமன்றததில் நான் கொணடுவரும் பிரேரணைகளுக்கு தமிழரசு எம். பி.க்கள், ஆதரித்து வாக்களிக்கட்டும் ஒரு வருடகாலத்தில், தமிழ்மக்களின் உரிமைகளைப்பெற்றுத்தருவோம்.

திருக்கோணமலைத்துறைமுகம் தேசியமயமாக்கப்பட்டபின் சமஷ்டிக் கட்சியினர் அடிக்கடி திருகோணமலைக்குச் செல்கின்றனர். இதனால் அரசாங்கத்தின் முடிவை மாற்றிவிட முடியுமா? தொழிலாளர்களும் திருமலையிலுள்ள சில பிரமுகர்களும், வந்து என்னைச் சந்தித்தபின், பிரதமரை சந்தித்து திருமலை துறைமுகம்பற்றி பேசினேன். துறைமுகத்திற்கு வெளியிலிருந்து ஆட்கள் எடுப்பதில்லை என பிரதமர் வாக்குறுதியளித்தார்.

பாரிஸ்டர் எம். சிவானந்தன் பேசும்போது: தீண்டாமைப் பிரச்னையை பலாத்காரத்தினால் ஒரு காலத்திலும் தீர்க்கமுடியாதென்றும் கொடிகாமத்தில் ஒற்றுமையாக வாழ்ந்த மக்கள் மத்தியில் வெளியூரிலிருந்து வந்தவர்கள் கலவரத்தை தூண்டி விட்டனரென்றும் இதனால் இரு பகுதியினரும் நஷ்டமடைந்துள்ளனர் என்றும் கூறினார்.

சமூக ஏற்றத்தாழ்வு எதிர்காலத்தில் தானகவே ஒழிந்துவிடும். படிப்படியாக ஒழிக்கவேண்டிய இப்பிரச்னையை, பலாத்காரம்மூலம் நொடிப்பொழுதில் ஒழித்துவிடலாம் என்பது தவறான கருத்தாகும். சிங்கள மக்களுடன் தமிழ் மக்கள் ஒத்துழைத்து உரிமையைப் பெறமுடியும் என்று நமது கட்சி கடந்த 20 வருடகாலமாக கூறிவந்தது.

இதே போல்தான் சிறுபானமைத் தமிழரும், பெரும்பான்மைத் தமிழருடன் ஒத்துழைத்துநல்லெண்ணத்தை வளர்த்து, சமூக ஏற்றத்தாழ்வை நீக்கவேண்டும். போராட்ட மூலமோ பலாத்கார மூலமோ, அரசியல் கட்சி ரீதியாகவோ இப்பிரச்னைக்கு என்றுமே தீர்வு காணமுடியாது. தமிழர்கள் தங்களுக்குள்ள பிரச்னைகளை ஒற்றுமையாக மனம் திறந்து பேசித்திர்த்துக்கொள்ள முடியும்' என்று திரு. சிவானந்தன் கூறினார்.

வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம், திரு. வி. ஆனந்தசங்கரி, திரு. எம். மோதிலால்நேரு, திரு எஸ்-ஸ்ரீதரன், பண்டிதர் பி. எம் ஞானப்பிரசாசம், திரு. கு. கமலதாசன், திரு. குமாரசாமி, செல்வன் ரி. குலேலதிரராசா உட்பமற்றும் பந்ரும் பேசினர்.

---

## தமிழ் மொழி...

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

யில் சமர்ப்பித்தார்கள். தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், நல்லூர் எம். பி. டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன், கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் ஆகியோர் பிரதமரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்திய குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

இம்மாதம் 15-ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் தமிழரசுக் கட்சியின் பொதுச்சபைக் கூட்டத்தில் பிரதமருடன் நடாத்திய பேச்சுவார்த்தையில் செய்யப்பட்ட முடிவுகள்சமர்ப்பிக்கப்பட்டுஅங்கத்தவர்களின் விாதத்துக்கு விடப்படுமெனத் தெரிகிறது.

திருக்கோணமலைத் துறைமுக தொழிலாளர்களின் விஷயத்தில் தகுந்த பாதுகாப்பளிக்கப்படுமென்றும், பிரதமர் தமிழரசுக் கட்சித் தலைவர்களிடம் உறுதியளித்ததாகத் தெரிகிறது.

மாவட்டசபை மசோதா பற்றி வேறொரு சமயத்தில் பேசுவதென்றும் சந்திப்பின்போது தீர்மானிக்கப்பட்டதாம்.

---

### பஸ் சேவை

கோப்பாய், வியாழன்

கோப்பாய்-யாழ்ப்பாணம் இடைத்தூர சேவைக்கென விடப்படும் பஸ்கள் குறித்த நேரத்தில் சேவையிலீடுபடுவதில்லையென பொதுமக்கள் புகார் செய்கின்றனர் குறிப்பாக காலை நேரங்களில் பள்ளிக்கூட மாணவர்கள், காரியாலயங்களுக்கு செல்லும் உத்தியோகத்தர்கள், பொது மக்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள்.

---

### நியமனம்

புன்னலைக்கட்டுவன், வியா.

உரும்பராய் இந்துக்கல்லூரி விவசாய ஆசிரியராக திரு. கே. பாலசுப்பிரமணியம் நியமிக்கப்பட்டுள்ளார்.

---

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு நவம்பர் மாதம் 10-ந் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org